PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

26.10.2016 - மலர் 13, இதழ் 35



இனிய தீபாவளி வாழ்த்துக்கள்





## உலோகங்களின் பயன்பாடுகள்

## தெற்காசிய பழங்குடிகளின் வாழ்க்கை முறை



UNESCO
United Nations Educational, Scientific and Cultural Organization

விஜய்

எனது அழகிய நகரம்
"My Beautiful City"
ஓவியப் போட்டி

விலை ரூபா 15

விஜய்

இளம் எழுத்தாளர் போட்டி - 2016

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வெள்ளிக்கிழமை. ஏழாம் தரத்தில் கல்வி கற்கும் தினேஷ், பாடசாலை செல்லவில்லை. நேற்று அவனும் வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களும் தமது வகுப்பாசிரியர்களுடன் பாடசாலை பஸ்ஸில் கல்விச் சுற்றுலா சென்றிருந்தவேளை, அவன் மழையில் நனைந்துவிட்டான். இதனால் தினேஷுக்கு காய்ச்சல் ஏற்பட்டது.



1. தினேஷ் வெள்ளிக்கிழமை பாடசாலை செல்லவில்லையாயின், அவன் சுற்றுலா சென்ற தினம் யாது?
   ..........................................................
2. அவனுடன் வேறு யாரெல்லாம் கல்விச் சுற்றுலா சென்றார்கள்?
   ..........................................................
3. தினேஷ் ஏன் பாடசாலை செல்லவில்லை?
   ..........................................................
4. அவர்கள் எதில் சுற்றுலா சென்றார்கள்?
   ..........................................................



1. இரண்டு சீல்கள் .................................. விளையாடின.
   1. மணி
   2. பந்து
   3. பொம்மை

2. அவை தமது .................................. நுனிப் பகுதியால் பந்தை தாங்கியிருந்தன.
   1. நாக்கின்  2. வாலின்  3. மூக்கின்

3. சீல்கள் பந்து விளையாடுவதில் அதிக .................. காட்டும்.
   1. விருப்பம்
   2. வெறுப்பு
   3. சிறப்பு









1. படத்தில் காணப்படும் விலங்கினம் யாது?
   ..................................
2. அவை கிளைகளுக்குக் கிளை தாவி விளையாடும் மரம் யாது?
   1. தென்னை மரம்  2. வேப்ப மரம்  3. மா மரம்
3. இவற்றைப் போன்று மரத்திற்கு மரம் தாவிச் செல்லும் இயல்புடைய மற்றுமொரு பிராணியைக் குறிப்பிடுக.
   ..........................................
4. இந்த விலங்கினத்தை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்? ..........................................

நிழற்படங்களுக்குப் பொருத்தமான செயற்பாடுகளை தெரிவுசெய்து எழுதுங்கள்

ஒவியங்கள் வரைவது/ அறுவடை செய்கின்றார்/ மீன் பிடிக்கின்றார்/ படகு செலுத்துவது/ பட்டம் விட்டு மகிழ்கின்றனர்/ சிற்பங்கள் செதுக்குவதில்/ கால்பந்து விளையாடினர்



1. அப்பாவும் மகனும் ..................................



2. பாலா குளத்தில் ..................................



3. .................................. இவரது தொழிலாகும்.



4. கமல் .................................. திறமை மிக்கவர்.

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# புவி வெப்பத்தைக் கட்டுப்படுத்த ஒப்பந்தம் கைச்சாத்து


அண்மையில் ருவண்டா நாட்டின் தலைநகர் கிகாலியில், உலக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்களிப்பில் இடம்பெற்ற இந்த கூட்டத்தின் நிறைவில், புவி வெப்பமடைதலுக்கு பிரதான காரணியாக இருக்கும் ஹைட்ரோஃப்ளூரோ காபன்களின் (Hydrofluoro carbons – HFC) பயன்பாட்டை படிப்படியாகக் குறைத்து, காலப்போக்கில் அதனை முற்றாக நிறுத்திக்கொள்வதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றதோடு, பங்குபற்றிய நாடுகளின் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்ததையடுத்து, ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.



கிகாலியில் இடம்பெற்ற பிரதிநிதிகள் கூட்டம்

உலக வெப்பமடைதலுக்கான பிரதான காரணிகளில் ஒன்றாகக் கருதப்படும் ஹைட்ரோஃப்ளூரோ காபன்கள், காபனீரொட்சைட் வாயுவை விட ஆயிரம் மடங்கு நச்சுத்தன்மை வாய்ந்தவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் மற்றும் ஸ்ப்ரே வகைகள் என்பனவற்றில் இந்த ஹைட்ரோஃப்ளூரோகாபன்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. புவி வெப்பம் அதிகரித்தல், ஓசோன் படலம் பாதிப்பு, திடீர் காலநிலை மாற்றங்கள் போன்ற பாதிப்புகளுக்கு இத்தகைய நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களின் வெளியேற்றமே காரணமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.






எனவே, கூட்டத்தில் கலந்துகொண்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்திற்கமைய, பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஹைட்ரோஃப்ளூரோ காபன்களின் பயன்பாட்டை படிப்படியாகக் குறைத்து, முற்றிலும் நிறுத்திக்கொள்வதற்கான கால எல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த வாயுக்களின் பயன்பாட்டினை படிப்படியாக குறைத்து, 2036 ஆம் ஆண்டாகும்போது 85 சதவீதமாகக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளில் இதற்கான முயற்சிகள் 2024 அல்லது 2028 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.






## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் விபரம்

2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களைப் பிரசுரிக்க 'விஜய்' பத்திரிகை தயாராக உள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை...**

★ சித்தியடைந்த மாணவரின் புகைப்படத்துடன், பெற்ற புள்ளிகள், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஒரு தாளில் தெளிவாக எழுதி, பெற்றோர் கையொப்பம், பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் அத்தாட்சி முத்திரையையும் பதித்து, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சிப் பிரதியுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

★ குழுப்படம் அனுப்புபவர்களாயின், மீண்டும் தனிப்படம் அனுப்புவதை தவிர்க்கவும்.

★ ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2016 நொவெம்பர் 30.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் 2016,
'விஜய்'
த.பெ.எண் 2037, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ரோம் நகரில் வாழ்ந்த மன்னனிடம் அடிமையாக இருந்த ஒருவன் மன்னனின் கொடுமைகள் தாங்காது அரண் மனையை விட்டு தப்பித்து காட்டுக்குள் ஒடி ஒளிந்துகொண்டான். அவன் ஓடி ஒளிந்த காட்டில் ஒரு சிங்கம் நொண்டிக்கொண்டே அவன் அருகில் வந்து காலைத் தூக்கிக் காட்டியது. முதலில் அந்த அடிமை பயந்தான். ஆனால், சிங்கத்தின் காலை அவன் பிடித்துப் பார்த்தபோது, அதன் காலில் முள் ஒன்று குத்தி இருந்ததைக் கண்டான். முள்ளைப் பிடுங்கி எறிந்தான். வலி நீங்கிய சிங்கம் காட்டுக்குள் ஓடி மறைந்தது.

சிறிது காலத்திற்குப் பின்னர் மன்னனின் காவலாளி கள் அந்த அடிமையைப் பிடித்துவிட்டார்கள். பின்னர் மன்னனிடம் ஒப்படைத்தபோது, அக்கால வழக்கப்படி, சிங்கத்தை ஏவிவிட்டு, மரண தண்டனை வழங்கும்படி, மன்னன் தீர்ப்பளித்தான்.



## பணிவு

மறுநாள் காலை தண்டனை கொடுக்கும் இடத்திற்கு காவலாளிகள் அடிமையைக் கொண்டு சென்று விட்டார்கள். அந்த இடத்தின் ஒரு மூலையில் இருந்து, பல நாட்கள் உணவு வழங்காது கோரப்பசியிலிருந்த சிங்கம் வெளியில் பாய்ந்து வந்தது. வேகமாகப் பாய்ந்து அந்த அடிமையின் அருகே வந்ததும் சற்றே உற்றுப் பார்த்தது. அன்று தனது காலில் குத்திய முள்ளை எடுத்துவிட்டவன் இவன்தானே என்பதை உணர்ந்த சிங்கம் அவன் காலடியில் அமர்ந்துகொண்டது. அடிமையும் அந்த சிங்கத்தை அடையாளம் கண்டுகொண்டு அதைத் தடவிக் கொடுத்தான். இந்த காட்சியைக் கண்ட அரசனும் அங்கு கூடியிருந்த மக்களும் ஆச்சரியப்பட்டனர்.

மன்னன் அடிமையை அழைத்து சிங்கம் பணிவாக நடந்துகொண்டமைக்கான காரணத்தைக் கேட்டறிந்து கொண்டான். பின்னர், அடிமையின் இரக்க குணத் தையும் சிங்கத்தின் நன்றி உணர்வையும் எண்ணி மகிழ்ந்தார். அதனைத் தொடர்ந்து அடிமையை விடுதலை செய்ததுடன், சிங்கத்தை காட்டிற்கே கொண்டுசென்று விடுமாறு உத்தர விட்டான்.

# சீக்ரட் சிக்ஸ்

# இரகசிய குழு...

## தொடர்கதை...

**ஜே.விபாகர்**

**06**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**ஹரிஷ் மீண்டும் தெரு முனையைக் கவனிக்கலாம் என்று திருப்பும்போது ஒரு ஒளி அவன் கண்ணில் பட்டது. கூர்ந்து கவனித்தான். அது விட்டு விட்டு ஒளிர்ந்தது; ஏதோ, யாருக்கோ சமிக்ஞை கொடுப்பது போல. சில நொடிகளில் நின்று போனது.**



மலையுச்சியில் இருந்து கீழே யாருக்கோ அந்த சிக்னல் கொடுக் கப்பட்டிருக்க வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

மேலும் சில நிமிடங்கள் மரத்திலிருந்தவாறே சுற்றிக் கவனித்தான். எந்தவித மான நடவ டிக்கைகளும் தென்பட வில்லை. மணி 12:30 தாண்டியதும், சலித்துப்போய் கீழே இறங்கி, மீண்டும் வீடு சென்று படுத்துக் கொண்டான்.

"அடப்பாவி...! அநியாயமா நல்லா தூங்கிட்டு இருந்த என்னை எழுப்பி, கடைசியில் எதுவுமே நடக்காமல் வந்து தூங்கிட்டானே" என்று மனதி னுள் நினைத்துக் கொண்டது மொன்டி. அடுத்தநாள் காலை அருணும், ஹரிஷும் எதார்த் தமாக சந்தித்துக்கொண்டனர். அவர்கள் நேற்றைய நிகழ்வு கள் பற்றிப் பேசிக்கொண்டி ருக்க, அங்கு பரபரப்பாக ஓடி வந்தான் ராகுல்.

"ஹேய்!... கேள்விப்பட் டீங்களா...!?"

"என்ன...?"

"நேற்று வழக்கம்போல என் அக்காவும், அவளோட நண்பிகளும் வகுப்பு முடிந்து வரும்போது கோட்டை மலைத் தோட்டம் வழியாக வந்திருக்காங்க... அப்போ..."

"தோட்டம் வழியா ஏதோ, அவங்களை துரத்திக் கொண்டு வந்துச்சாம்! விசித் திரமான சத்தத்தோட..."

"அவங்க என்னென்று சரியாகப் பார்க்க வில்லையா...?"

"இல்லை. சரியாகத் தெரிய வில்லையாம்"

"ம்ஹும்ம்..."

மூவரும் சிறிது நேரம் பேச்சற்று நின்றனர். அருண் மௌனத்தைக் கலைத்தான்.

"சரி, இன்றைக்கு எங்கள் வீட்டின் பின்னால் உள்ள மரவீட்டில் சந்திப்போம். அருண் கூறிவிட்டு நகர்ந்தான்"

பொழுது சாய்ந்தவுடன் அருணும் அனிதாவும் புறப் பட்டனர். இன்றைய இடம் அனிதாவுக்கு மிகவும் பிடித்தமான இடம். அவர்களின் வீட்டுக்கு சிறிது தூரம் பின்னாலிருந்தது ஏற்கனவே பிருந்தா அங்கு வந்து ஆர்வத்துடன் காத்திருந்தாள். அவள் கைகளில் நிறையத் தாள்கள் இருந்தன.

"ஹாய்... ஹாய்...!"

"சரி, நாங்கள் இப்போது வேலையை தொடங்குவோம்..." அருண் சிந்தனையுடன் கூறினான்.

மொன்டியும் அவர்களுடன் வந்திருந்தது.

"ஹாய்... கெட்டிக்கார மொன்டி...!"என்று கொஞ்ச ஆரம்பித்தாள் அனிதா.

"ஏய் அனிதா மொன்டியை விட்டுவிட்டு வா..."

"நாம் நிறைய விஷயம் பேச வேண்டும்"

அருண் கண்டிப்புடன் கூறினான்.

வழமைபோல் தரையில் பாய் விரித்து சுற்றிலும் அமர்ந்துகொண்டார்கள். மொன்டி அனிதாவின் மடியில் தலை சாய்த்தது.

"இன்றைக்கு இரவு எல் லோரும் இங்கேயே தூங்கு வோமா? நான் உங்க வீடு களுக்கு ஃபோன் பண்ணி சொல்லிவிடுகிறேன்..."

"அனிதா ஆர்வமாகக் கேட்டாள்"

அப்போது அருண்,

"அப்படி செய்தால்தான் இன்று இரவு நாம் போடும் திட்டத்துக்கு சரிவரும். எல்லோருக்கும் அதற்கு ஓகே தானே...!?"

"என்ன திட்டமா...!?" ராகுல் பதட்டத்துடன் கேட்டான்.

"முதலில் எல்லோரும் திரட்டிய தகவல்களை பரிமாறுவோம். பின்னர் அது பற்றி சொல்கிறேன்"

அருண், அனிதா, ராகுல், ஹரிஷ் நால்வரும் தாங்கள் கேட்டதையும், பார்த்ததை யும் பகிர்ந்தார்கள். இறுதியா கப் பிருந்தா சில தாள்களைப் பரப்பினாள். அநேகமானவை படங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீய எண்ணங்களை தீப ஒளியால் அகற்றும் நாளாம் தீபாவளி திருநாள்



உலகெங்கும் பரந்து வாழும் இந்து சமயத்தவர்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் நிகழ்வுகளில் சிறப்பான இடம் வகிப்பது தீபாவளி திருநாள் ஆகும்.தமிழ் மாதங்களில் ஒன்றான ஐப்பசி மாதமானது, இந்துக்களுக்கு மிகவும் விசேடமான மாதமாகும். ஏனெனில், இம்மாதம் நவராத்திரி, கேதார கௌரி விரதம், தீபாவளி என பல விசேடமான கொண்டாட்டங்களையும் விரதங்களையும் அனுஸ்டித்து மக்கள் மகிழ்வுடன் இருக்கும் புனித காலமாகும். அந்தவகையில் தீபாவளித் திருநாளானது, ஐப்பசி மாதம் வரும் அமாவாசை தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படுகின்றது. அதற்கமைய, இந்த வருடம் நொவெம்பர் 29 ஆம் திகதி அன்றே தீபாவளி கொண்டாடப்படவுள்ளது.

## தீபாவளி தினத்தன்று...

★ தீபாவளி தினத்தன்று இந்து மக்கள் அதிகாலையில் எழுந்து, வீட்டில் இருக்கும் பெரியவர் ஒருவர் மூலம் ஏனைய அங்கத்தவர்களின் தலையில் நல்லெண்ணெய் தேய்த்து, நீராடுவார்கள்.

★ பின்னர் புத்தாடை புனைந்து, குடும்ப அங்கத்தவர்களோடு ஆலயம் சென்று இறை வழிபாடு மேற்கொள்வர்.

★ அதனைத் தொடர்ந்து உறவினர்கள் வீடுகளுக்கோ அல்லது வீட்டின் அயலவர்களுக்கோ இனிப்புகளை வழங்கி வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வர்.

★ இல்லம் முழுவதும் இரவில் தீபம் ஏற்றி, சிறுவர் முதல் பெரியோர் வரை பட்டாசு, வான வேடிக்கைகளைக் கொளுத்தி இனிதே மகிழ்வர்.



## தீபாவளி திருநாள் கொண்டாடுவதற்கான காரணம்

முன்னொரு காலத்தில் மக்களையும் முக்கோடி தேவர்களையும் துன்புறுத்திய நரகாசுரனின் கொடுமைகளை தாங்காது தேவர்கள் அனைவரும் விஷ்ணுவிடம் வேண்டிய போது, அவர்களின் வேண்டுதலை ஏற்ற விஷ்ணு மண்ணுலகிற்கு கிருஷ்ணராக அவதாரம் எடுத்து, நரகாசுரனை வதம் செய்தார். இதன்போது, நரகாசுரன் இறக்கும் தருவாயில் கிருஷ்ண பரமாத்மாவிடம் சரணடைந்து, ''கர்வம், பொறாமை, ஆணவம் எனும் தீய குணங்களைக் கொண்ட என்னுடைய செயல்களை எண்ணி வெட்கப்படுகின்றேன். என்னைப் போன்று மக்களும் வாழாது தம்முள் இருக்கும் தீய எண்ணங்களை விட்டு பிரகாசமான வாழ்வைப் பெற இன்றைய நாளை தீபமேற்றி மகிழ்வுடன் கொண்டாட வேண்டும் என எனக்கு வரமருள வேண்டும்'' என வேண்டினான்.

எல்லைகளற்ற இரக்கமும் அன்பும் கொண்ட கிருஷ்ண பரமாத்மாவும் அதற்கு இணங்கி, நரகாசுரனுக்கு அருளிய நாளினை தான் நாம் தீபாவளி என்று கொண்டாடுகின்றோம்.



## தீபங்கள் ஏற்றக் காரணம்

தீப ஒளி பெறுவதற்காக, தீபத்தில் பரமாத்மாவும் (கடவுள்) ஜீவாத்மாவும் மனிதர்களின் ஆத்மா) இணைந்தால் பிரகாசம் பெறமுடியும் என்பதுபோல மகிழ்வான வாழ்விற்கு நாம் அனைவரும் இறை சிந்தனையில் இருக்க வேண்டும். அதனை வெளிப்படுத்தவே, தீபாவளி அன்று தீபங்களை நாம் வீட்டில் ஏற்றுகின்றோம்.



## தீபாவளி என்பதன் அர்த்தம்

தீபாவளி என்பதைப் பிரிக்கும்போது, தீபம்+ஆவளி என்று பொருள்படும். இதில் 'தீபம்' என்பது விளக்கு, 'ஆவளி' என்பது வரிசை ஆகும். இதனால், இல்லங்களில் தீபங்களை வரிசையாக வைத்து ஒளியேற்றுவதால் இத்திருநாளை 'தீபாவளி' என்று அனைவரும் அழைக்கின்றோம்,





## தீபாவளி தினத்தன்று எண்ணெய் வைத்துக் குளிப்பதன் காரணம்

நாம் அனைவரின் மனங்களில் உள்ள தீய எண்ணங்களைக் கலைத்து, தூய்மையாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, இல்லத்தில் உள்ள மூத்த அங்கத்தவர் ஒருவர் சிறியோர் முதல் அனைவருக்கும் தலையில் நல்லெண்ணெய் தேய்ப்பது ஐதீகமாகும்.

**இவ்வாறு உள்ளங்களில் படிந்துள்ள தீய குணங்கள், கசப்பான அனுபவங்களை நீக்கி தூய்மை பெறுவதோடு, மகிழ்வுடன் வாழ தீபாவளித் திருநாளைக் கொண்டாடவுள்ள அனைத்து நல் உள்ளங்களுக்கு தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பளை அ

இலங்கையில் முக்கியமான ஏழு இராசதானிகளுள் ஆறாவது இராசதானியே கம்பளை இராசதானி ஆகும். இலங்கை வரலாற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய காலகட்டமாக இது கருதப்படுகின்றது. இக்கால மன்னர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி இரு பிரபுக்கள் குடும்பங்கள் ஆட்சி அதிகாரம் செலுத்தியமையும் கம்பளை யுகத்தில் தனித்துவ அம்சமாகும். இக்கால குறிப்புகளை நோக்குவோம்.

## இராசதானியின் தோற்றம்

கம்பளையானது, இராசரட்டையில் இருந்து சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையில் மகாவலி கங்கையின் இடது கரையோரப் பகுதியை **1341**ஆம் ஆண்டில் 4 ஆம் புவனேகபாகு தனது இராசதானியாக்கினான். இவன் குருணாகலை இராசதானியை ஆண்ட இறுதி மன்னனாகிய ஐந்தாம் விஜயபாகுவின் மூத்த மகனாவான். இவனது ஆட்சி முழு இலங்கையிலும் வியாபித்திருக்கவில்லை. காரணம் அப்பொழுது இலங்கையின் வட பகுதி ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சியின்கீழ் இருந்தமையே ஆகும். நான்காம் புவனேகபாகுவிற்கு சேனாலங்கார செனவிரத் (சேனாதிலங்கார) எனும் அமைச்சன் இருந்தான். அவன் **1351** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாசன சீர்திருத்தத்திற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்தான்.



## ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னன்



கி.பி **1351** ஆம் ஆண்டில் 5 ஆம் பராக்கிரமபாகு கம்பளையின் அரசனானான். இவன் 4ஆம் புவனேகபாகுவின் சகோதரன் ஆவான். 4 ஆம் புவனேகபாகுவின் மறைவின் பின்னர் இவன் முடிசூட்டப்பட்டான். அமைச்சரான சேனாலங்காதிகார செனவிரத்திற்கு நடவடிக்கைகளை முன்நின்று நடத்தி 5 ஆம் பராக்கிரமபாகுவிற்கு சிறந்த ஒத்துழைப்புகளை வழங்கினான். அமைச்சரான சேனாதிலங்காரவின் மகனாகிய 'விக்ரமபாகு' என்பவன் அச்சமயத்தில் 'பிரபுராஜா' என்ற பட்டத்துடன் இணையரசனாகப் பதவி வகித்தான்.

## மூன்றாம் விக்ரமபாகு

பிரபுராஜா பதவி வகித்த விக்ரமபாகு, யாழ்ப்பாண இராசதானியை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தியின் உதவியுடன் 5 ஆம் பராக்கிரமபாகுவை அரச பதவியிலிருந்து நீக்கி றுகுணுவிற்குத் துரத்தப்பட்டான்.

அதன் பின்னர் **1360** ஆம் ஆண்டில் 3 ஆம் விக்ரமபாகு என்ற பெயரில் விக்ரமபாகு அரசனாக முடிசூடிக்கொண்டான். தனக்கு உதவி செய்த வடக்கு ஆட்சியாளனாகத் திகழ்ந்த 'மார்த்தாண்ட பெருமாள்' எனும் ஆரியச் சக்கரவர்த்திக்கு கப்பமாக மலையகத்தின் சில பிரதேசங்களில் வரி அறவிடும் உரிமையை வழங்கினான்.



3 ஆம் விக்ரமபாகுவின் பிரதம அமைச்சராக நிஸ்ஸங்க அழகேஸ்வரன் (நிஸ்ஸங்க அழகக்கோனார்) நியமிக்கப்பட்டான். இவனே, நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் முழுவதையும் முன்னெடுத்தான்.

## ஐந்தாம் புவனேகபாகு

**1372** ஆம் ஆண்டில் 3 ஆம் விக்ரமபாகுவுக்குப் பின்னர் நிஸ்ஸங்க அழகேஸ்வரனின் மகன்

## சீனர்களின் வருகை

### ச்செங்-ஹோவின் வருகை

கம்பளை இராசதானியின் பின்னரைப் பகுதியில் சீனாவில் ஆட்சியில் இருந்த யுங்-லோ என்ற சீனச் சக்கரவர்த்தி, ச்செங்-ஹோ என்பவனது தலைமையில் கடற்படையொன்றை இந்து சமுத்திர பிரதேசத்திற்கு அனுப்பி வைத்தான். இதன்படி, அவனது படை கி.பி 1405 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தபோது, றைகம ஆட்சியாளனான வீர அழகேஸ்வரன் அவர்களை ஏற்கவில்லை. அதனால், மீண்டும் 1409 ஆம் ஆண்டில் சீனர்கள் இலங்கைக்கு வந்தபோது, இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு வழங்குவதற்காக பெறுமதியான பொருட்களை எடுத்து வந்திருந்தான். அப்போதும் வீரஅழகேஸ்வரன் புறக்கணித்தான். அதனால், ச்செங்-ஹோ தெற்கே தெய்வேந்திர முனையில் உள்ள விஷ்ணு தேவாலயத்திற்கு தான் கொண்டுவந்த பரிசில்களை காணிக்கைகளாக கையளித்தான். அத்தோடு, ச்செங் ஹோ சீனம், தமிழ் மற்றும் பாரசீக மொழிகளில் கல்வெட்டு ஒன்றையும் பொறித்தான். இதுதான் 'காலியின் மும்மொழிக் கல்வெட்டு' என புகழ்பெற்று விளங்குவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்கள்




ஐந்தாம் புவனேகபாகு என்ற பெயரில் கம்பளையின் மன்னனானான். இவ்வேளையில் அழகேஸ்வரன் பிரதம அமைச்சராகத் திகழ்ந்தான். ஆனால், சிறிது காலத்தில் அழகேஸ்வரன் மரணமானான். அதனால், 5 ஆம் புவனேகபாகுவின் சகோதரியின் மகனாகிய மற்றொரு அழகேஸ்வரன் பிரதம அமைச்சரானான்.

## வீரபாகு

**1391** ஆம் ஆண்டில் ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் அமைச்சர் ஒருவரான தேவமந்திரி மன்னனின் மரணத்தின்

## க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது



பின்னர் 'வீரபாகு' என்ற பெயரில் அரசனானான். எனினும், வீரபாகுவை அமைச்சர்களில் ஒருவரான அழகேஸ்வரன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால், அழகேஸ்வரன் றைகமவை தலைநகராகக் கொண்டு தாழ்நிலப் பிரதேசங்களை ஆட்சிபுரிந்தான். வீரபாகு அழகேஸ்வரனை அடிபணிய



வைக்க முயற்சித்தபோது, அழகேஸ்வரன் அவனிடம் இருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்றான். அதனைத் தொடர்ந்து வீரபாகு மன்னன் ஜயவர்தனபுரவை தலைநகராக்கி ஆட்சிபுரிந்தபோது, அழகேஸ்வரன், பெருஞ் சேனையுடன் மீண்டும் **1409** ஆம் ஆண்டில் வீரபாகுவுடன் போர் புரிந்தான். இப்போரில் வீரபாகு கொல்லப்பட்டான்.

## செங்கடகல பராக்கிரம பாகு




போரில் வீரபாகு மரணமடைய அழகேஸ்வரன் மீண்டும் றைகமவின் ஆட்சியாளனானான். எனினும், கம்பளையில் இருந்த சேனாதிலங்கார எனும் இளவரசனும் மலையகப் பிரதானிகளும் அவனது ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் வீரபாகு மன்னனின் பேரனாகிய பராக்கிரமபாகு ஏப்பாவை செங்கடகல மன்னனாக்கினர்.

## ஆறாம் பராக்கிரமபாகு

செங்கடகல பராக்கிரம பாகுவிற்கு பின்னர் கி.பி **1415** ஆம் ஆண்டில் பராக்கிரமபாகு எனும் பெயருடைய இளவரசனொருவன் தெதிகமயின் மன்னனாக முடிசூட்டப்பட்டான். இவனே, கம்பளை இராசதானியின் இறுதி மன்னனாவான். பிற்காலத்தில் கோட்டை இராசதானியின் புகழ்பெற்ற மன்னனாகத் திகழ்ந்த 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனே இவன் ஆவான்.

**- இரஞ்சித் ஜெயகர்**



### ச்செங்-ஹோவின் ஆக்கிரமிப்பு

அவனின் வருகையைத் தடுக்க வீர அழகேஸ்வரன் பெரும் படை ஒன்றை திரட்டினான். இப்படை குறித்த தகவல் ச்செங்-ஹோவுக்குக் கிடைத்தது. அதன் விளைவாக ச்செங்-ஹோ இரவோடிரவாக இரகசியமாக நகருக்குள் நுழைந்து 6 நாட்கள் கடும் யுத்தம் நடைபெற்றது. இறுதியில் வீர அழகேஸ்வரன் தோல்வி அடைந்து அவனும் அவனது குழுவினரும் கைதிகளாக சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அத்தோடு, கம்பளை யுகம் நிறைவுபெற்றது.

### சீனச் சக்கரவர்த்தியின் பரிவு

*1411* ஆம் ஆண்டில் சீனாவுக்கு கொண்டுசெல்லப்பட்ட வீர அழகேஸ்வரன் குழுவினர் சீன அரச சபையில் நிறுத்தப்பட்டனர். அங்கு சீனப் பேரரசன் அவர்களுக்கு விடுதலை அளித்தான். அத்தோடு இலங்கை அரசுரிமைக்கு தகுதியான ஒருவரின் பெயரைக் கூறும்படி கேட்டான். அவர்களின் கருத்துக்களின்படி, சீனச் சக்கரவர்த்தி தனது பிரதிநிதியாக செங்கடகல பராக்கிரமபாகுவை நியமித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ..............................................

01) **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. துருப்பிடித்த ஆணி குத்திய ஒருவருக்கு தாமதமின்றி குடிக்கக் கொடுப்பதற்கு ஏற்ற மருந்து யாது?

1. கொத்தமல்லி 2. மரமஞ்சள்
3. வில்வம்பூ 4. வேப்பம் இலை

02. தேங்காயை நன்கு காயவைத்துப் பெறப்படும் பொருளை எவ்வாறு அழைப்பர்?

1. வற்றல் 2. வடகம்
3. தேங்காய் 4. கொப்பரை

03. ஒட்டுண்ணித் தாவரமாக அமைவது எது?

1. மா 2. குருவிச்சை
3. நெப்பந்தீஸ் 4. மல்லிகை

04. பின்வரும் பிராணிகளில் பால் குடித்து வளரும் பிராணி எது?

1. கழுகு 2. ஆந்தை
3. வௌவால் 4. கிளி

05. பின்வரும் பூக்களில் நீர்ப்பூ அல்லாதது எது?

1. தாமரை 2. அல்லி
3. நீலோற்பலம் 4. செவ்வந்தி

06. எறும்புகள் முட்டை இடுவது;

1. துவாரங்களுக்குள் 2. இலைகளில்
3. தண்ணீரில் 4. குருவிக்கூட்டில்

07. வயலில் காணப்படும் வைக்கோல் எனக் கூறப்படுவது;

1. நெல் தாள் 2. மூங்கில் இலை
3. மூங்கில் குவியல் 4. இலைக் குவியல்

08. சாதாரண புழக்கத்தில் இருக்கக்கூடிய பொருள்;

1. சைக்கிள் 2. வானொலி
3. குளிர்சாதனப்பெட்டி 4. சீப்பு

09. மாலை நேரத்தில் மலரும் பூ யாது?

1. சூரியகாந்தி 2. நான்குமணிப் பூ
3. நந்தியாவட்டை 4. செவ்வரத்தை

10. பந்தலிட்டு வளர்க்கப்படும் தாவரம் அல்லாதது எது?

1. பூசணி 2. பாகல்
3. புடோல் 4. வெற்றிலை




11. வாகனங்களில் உராய்வை தடுக்கப் பயன்படும் பதார்த்தம்;

1. வினாகிரி 2. மசகு எண்ணெய்
3. டீசல் 4. தேங்காய் எண்ணெய்

12. பின்வருவனவற்றுள் ஆணிவேரைக் கொண்ட தாவரம் எது?

1. பப்பாசி 2. பனை
3. கமுகு 4. சோளம்

13. வீட்டுத் தோட்டப் பயிர்செய்கையின்போது நாம் செய்யக்கூடாதது எது?

1. கூட்டெரு பயன்படுத்தல்
2. நீர் பாய்ச்சுதல்
3. களை பிடுங்குதல்
4. கிருமிநாசினிகளைப் பயன்படுத்தல்

14. பம்பரகந்த என்பது ஒரு;

1. மலை 2. ஆறு
3. தீவு 4. நீர்வீழ்ச்சி

15. தகனம் நடைபெறத் தேவையான வாயு எது?

1. காபனீரொட்சைட் 2. ஒட்சிசன்
3. ஐதரசன் 4. ஆகன்

02) **பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

01. இரும்பு ஆணியைக் கழட்டப் பயன்படும் உபகரணம் உளி ஆகும். (----)
02. வயலின் ஒரு தோற்கருவி ஆகும். (----)
03. உணவுகளில் சிறந்த நிறையுணவு நெத்தலி மீன். (----)
04. பாய், பெட்டி போன்றவற்றை பின்ன ஓலை தேவைப்படும். (----)
05. கடதாசிக் கூழ் தயாரிக்க தாவரம் பயன்படும். (----)
06. வேப்பம் வித்து சிறந்த கிருமிநாசினி ஆகும். (----)

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## கணிதம்

(ஒக்டோபர் 19 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 01. 2 | 02. 3 | 03. 3 | 04.1 | 05. 1 |
| | 06. 1 | 07. 2 | 08. 2 | 09. 1 | 10. 1 |

02) 01. 1. 4
2. 4
3. 6

02. 1. 60
2. ரூபா 12 00
3. ரூபா 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வளிமண்டலத்தில் மிதக்கும் உறைந்த நீர்த்துளிகள் அங்கு நிலவும் குளிரான காலநிலையால் பனிக்கட்டிகளாக மாறுவதுண்டு. இவ்வாறு பனிக்கட்டிகளான நீர்த்துளிகள்



## ஆலங்கட்டி மழை எப்படி உருவாகின்றது?

அனைத்தும் ஒன்றிணைந்து பெய்யும் மழையைத்தான் 'ஆலங்கட்டி' மழை என்பர்.

★ இந்த மழையை ஆங்கிலத்தில் 'ஹெயில் ஸ்டோன்ஸ்' (Hail Stone) என அழைப்பர்.

★ இம்மழை பெரும்பாலும் மலைகள் சார்ந்த பிரதேசங்களிலேயே ஏற்படும் என வானிலை அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

★ இவை 5 தொடக்கம் 200 மி.மீற்றர் அளவிலான பனிக்கட்டி மழையாகப் பெய்கின்றது.

★ அதிக பாரமுள்ள பனிக்கட்டிகள் பூமியில் விழும்போது, பாரிய பொருட் சேதமும், சிலவேளைகளில் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றது.

# தொலைக்காட்சியில் Subtitle அமைக்கப்படும் விதம்




தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும்போது திரையின் அடிப்பாகத்தில் எழுத்தோட்டங்கள் இடம் பெறுவதைக் கண்டிருப்பீர்கள். இவை ஆங்கிலத்தில் Subtitle என்று குறிப்பிடப்படுகின்றது. இன்னும் சில சந்தர்ப்பங்களில் அறிவித்தல்கள், விளம்பரங்கள் போன்றனவும் இவ்வாறு இடம்பெறுவதுண்டு. எவ்வாறு இவை இடம்பெறுகின்றன? என்றவோர் கேள்வி உங்களில் எழலாம். இவை அநேகமாக, நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.




அதாவது, காட்சிக்குக் காட்சியாக எழுத்து வடிவங்கள் முதலில் கணினி எழுத்தாக்கமாக உருவாக்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, வசன அமைப்புக்கள் மொழிபெயர்க்கப்படும் போது அதற்கென 'டைமிங்' எனப்படும் 'செக்கன்' அடிப்படையிலான நேர அளவீட்டின்படியே அவை எழுதப்படும். இவ்வாறு எழுத்துக்கள் கணினி அமைப்பில் கோர்க்கப்பட்ட பின்னர் அதற்குரிய காட்சியில் அவற்றை சரிவரச் சேர்ப்பதே அடுத்த கட்டப் பணியாக இருக்கும். இதன்போதும் கூட அதற்குரிய நவீன ரக தொழில்நுட்பக் 'கலவை' கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, ஒரு காட்சிக்குள் இன்னொரு அம்சத்தை சேர்க்கும்போது அது கலவை செய்தலாக இருப்பதாலேயே இது 'கலவை' கருவி எனப்படுகின்றது.




இவ்வாறு எழுத்தோட்டங்கள் அவ்வவ் காட்சிக்கு ஏற்ப தொடராக சேர்க்கப்படுகின்றது. குறிப்பாக, ஒரு காட்சியை எடுத்துக் கொண்டால், அந்த காட்சியில் வசனங்கள் பேசும்போது, அதே வசனத்திற்குரிய மொழிபெயர்ப்பே திரையில் காட்டப்படும் விதமாக அமைதல் வேண்டும். இதனையிட்டு மிகவும் அவதானம் செலுத்தப்படும். ஏனென்றால், காட்சியில் பேசப்படும் வசனத்திற்குரிய மொழிபெயர்ப்பானது, முந்தியோ, பிந்தியோ அமைந்துவிட்டால் எல்லாமே பாழ்பட்டுப் போய்விடும். எனவேதான் மொழிபெயர்ப்பை எழுதுபவரும் அதனை ஒளிக்கலப்பு செய்பவரும் மிகவும் நுணுக்கமாகக் கையாளும் ஒரு பணியாகவே இது இருக்கும். இவ்வாறு Subtitle வழங்கப்படும் முறை அறிமுகமாவதற்கு முன்னர் கதைச் சுருக்கங்களைக் கூறும் வழிமுறையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னரே, வசனத்திற்கு வசனம் மொழிபெயர்ப்பை எழுத்தில் வழங்கும் வழிமுறை அறிமுகமாகியது.

(தொடரும்)

- ரீஷபன்

# ரயில்கள் பாலத்தைக் கடக்கும்போது ஏன் இரைச்சல் அதிகமாகின்றது?



ரயில் பயணத்தின் போது ஏற்படும் இரைச்சல் சத்தம் எவ்வாறு உருவாகின்றது என்பது உங்களுக்கு தெரியுமா?

பொதுவாக, ஒரு ரயில் தண்டவாளத்தின் மேல் பயணிக்கும்போது மூன்று காரணங்களால் இந்த இரைச்சல் உருவாகின்றது.


ரயிலின் இரும்பு சக்கரங்கள் தண்டவாளத்தின்மீது பயணிக்கும்போது ஏற்படும் உராய்வினால் ஏற்படும் இரைச்சல்.

இரண்டாவது- சரளைக் கற்களைக் கொண்டு நிறைந்த தண்டவாளத்தின் மத்தியில் பதித்துள்ள சிலிப்பர் கட்டைகளில், உருவாகும் அதிர்வுகளாலும் இரைச்சல் ஏற்படும்.

மேற்கூறப்பட்ட இரு இரைச்சல்களும் பூமியின் மீது நிகழ்வதால் அதன் தாக்கம் குறைவாக இருக்கும். ஆனால், ரயிலானது, பாலத்தின்மீது பயணிக்கும்போது, தண்டாவளத்தின் சிலிப்பர் கட்டைகள் பூமியோடு தொடர்பற்று அந்தரத்தில் அமைக்கப்படுவதால் அதிர்வுகளின் இரைச்சல் அதிகமாகும். அத்தோடு, தரை அல்லது நீரின் மேல் இந்த பாலங்கள் அமைப்பதால் அதன் மேல் ரயில் பயணிக்கும்போது ஏற்படும் இரைச்சல் நீரின் மீதோ அல்லது தரையின் மீதோ படுவதால் ஏற்படும் எதிரொளிகளாலும் சத்தம் இரட்டிப்பாக அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## விஜய் அறிவுக்கு விருந்து



### குறுக்கெழுத்துப் போட்டி: 211

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ |
| | ■ | | 3 | ■ | 4 |
| | ■ | | 5 | 6 | |
| | | 7 | ■ | ■ | |
| ■ | | 8 | | 9 | |
| 10 | 11 | | ■ | | 12 |

**மேலிருந்து கீழ்**

01. எல்லா விடயங்களையும் அறிந்து பேசுபவன்.
02. இலங்கையில் பிரசித்திபெற்ற முருகன் ஆலயம் அமைந்துள்ள இடம்.
04. சூரியன். (குழம்பியுள்ளது)
05. இடது- எதிர்ப்பதம். (குழம்பியுள்ளது)
09. மட்பாண்டம் செய்யத் தேவைப்படும் மண் வகை.
11. உபகரணம். (தலைகீழ்)


**இடமிருந்து வலம்**

01. விண்வெளிப் பயணத்திற்குப் பயன்படும் வாகனம்.
03. ஆராதனை. (மாறியுள்ளது)
06. உமாதேவி. (குழம்பியுள்ளது)
07. இந்த நதிநீர் வழங்கல் தொடர்பில் அண்மையில் தமிழ்நாடு- கர்நாடகாவுக்கு இடையில் பிரச்சினை ஏற்பட்டது. (மாறியுள்ளது)
08. மகளின் கணவன். (குழம்பியுள்ளது)
10. அதிர்ஷ்டம்.
12. காற்று. (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 210 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1க | ரு | ட | ன் | ■ | 2எ |
| ர | ■ | ன் | 3வா | 4அ | ழு |
| க | ■ | 5க | ■ | ■ | த் |
| ம் | ■ | ■ | ■ | ய் | 6தா |
| ■ | ■ | 7பா | னை | ■ | ணி |
| 8பு | த் | தி | 9ம | தி | ■ |

### எத்தனை உள்ளன?



 ..................


 ..................

 ..................

 ..................

### அறிவுக்கு விருந்து (12.10.2016) விடைகள்


| | |
|---|---|
| jacket | skirt |
| trainers | slippers |
| shirt | scarf |
| shorts | trousers |
| t-shirt | blouse |



| | |
|---|---|
| ○ | 1 |
| □ | 7 |
| △ | 5 |
| ▭ | 3 |
| ♡ | 4 |
| ☆ | 5 |




### குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக



| | | | |
|---|---|---|---|
| allb | ______ | aoct | ______ |
| tibe | ______ | ance | ______ |
| aobt | ______ | kucd | ______ |

### ஒவ்வொரு படத்திலுமுள்ள வெற்றிடத் திற்குப் பொருத்தமான பகுதியை இணைத்துக் காட்டுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

# இளம் எழுத்தாளர் போட்டி - 2016

ஊடக அனுசரணை: விஜய்

மேல் மாகாண இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். இளம் எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரை இதுவரை எந்தவொரு நூலிலும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. **இளம் எழுத்தாளருக்கான நாவல் போட்டி**
(20,000 முதல் 25,000 சொற்கள் வரை)
2. **இளம் எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி**
(750 முதல் 1,000 சொற்கள் வரை)
3. **இளம் எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி**
(40 முதல் 60 வரையிலான வரிகள்)
4. **இளம் எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி**
(40-60 வரிகள்)
5. **இளம் பாடலாசிரியருக்கான போட்டி**
(பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)

## விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்த தாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.
06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது.
(மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)
07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.
08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூலப் பிரதியை அனுப்புவதை தவிர்க்கவும். ஏனெனில், தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள் அனுப்பப்பட மாட்டா.
09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016 ஒக்டோபர் 31. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.



முகவரி: மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி 2016
கலை, கலாசார அமைச்சு,
4ஆம் மாடி, ரன்மகபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

### மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி - 2016

01. போட்டியின் பெயர்: ..................
02. மொழி மூலம்: ..................
03. போட்டியாளரின் முழுப் பெயர்: ..................
04. புனைபெயர்: ..................
05. நிரந்தர முகவரி: ..................
06. மாவட்டம்: ..................
பிரதேச செயலகப் பிரிவு: ..................
07. பிறந்த திகதி: ..................
அடையாள அட்டை இலக்கம்: ..................
08. 2016.10.31இல் வயது: ..................
வருடம்: .............. மாதம்: .............. தினங்கள்: ..............
09. பால்: ..................
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: ..................
..................
11. தொலைபேசி இலக்கம்: ..................
மின்னஞ்சல் முகவரி: ..................
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா? ..................
13. ஆக்கத்தின் பெயர்: ..................
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிசைகளின் எண்ணிக்கை: ..................
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? ..................
16. உங்களின் சுய ஆக்கமா? ..................
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ..................
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: ..................
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ..................

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2016 .................. போட்டியாளரின் கையொப்பம் ..................


உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers
THE SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெற்காசியாவின் ப

பாரிய முன்னேற்றங்களுடன் தினமும் நவீன விடயங்களை கண்டறியும் நோக்கிலேயே இன்று நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எனினும், இன்று வரை ஆரம்பகால உலகிலேயே வாழ்ந்து வருகின்ற மக்கள் பிரிவினர் உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ளனர். அவர்கள் 'பழங்குடிகள்' அல்லது (ஆதிவாசிகள்) என்று அழைக்கப்படுகின்றனர். உலகில் சுமார் 370 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட பழங்குடிகளில், மூன்றில் இரண்டு பங்கினர் ஆசியாவிலேயே வசித்து வருகின்றனர். உலகவாழ் பழங்குடிகளில் சில பிரிவினர் இன்றும்கூட பழமையான வாழ்க்கை முறையையே கடைப்பிடித்து வருகின்ற அதேவேளை, பெரும்பாலான பழங்குடிகள் உலகின் நவீன போக்கிற்கு ஏற்ப தம்மை மாற்றி வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த இதழில் தெற்காசியாவின் பழங்குடிகள் சிலவற்றை பார்ப்போம்...



## கொன்டி

★ **வாழும் பகுதி:** மத்திய இந்தியா, தெலுங்கானா, ஆந்திரா, கிழக்கு மகாராஷ்டிரா, மேற்கு ஒடிசா.

★ **மொத்த சனத்தொகை:** 14 மில்லியன்

★ **குடியிருப்புகள்:** இந்த மக்கள் சிறு குழுக்களாக சிறு கிராமங்களில் வசிப்பர். வைக்கோல் மற்றும் களிமண்ணினால் வீடுகள் அமைக்கப்படுகின்றன. கொன்டிகளின் பிரதானி 'மஹ்ஜி' அல்லது 'பட்டேல்' என்று அழைக்கப்படுகின்றார்.

★ **ஜீவனோபாயம்:** விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு.

★ **மொழி:** கொன்டி. தவிர; தெலுங்கு, ஹிந்தி, மராத்தி ஆகிய மொழிகளும் புழக்கத்தில் உள்ளன.





## லெப்ச்சா

வேலைகள் செய்யும்போது ஆண் - பெண் பேதமில்லை. முரண்பாடுகள் அமைதியை பாதிக்கும் என்ற எண்ணம் கொண்டவர்கள். எப்பொழுதும் அமைதியை விரும்புவர்.

★ **வாழும் பகுதி:** தென் மேற்கு பூட்டானின் காடுகள் மற்றும் பள்ளத்தாக்குப் பகுதிகள், இந்தியா, நேபாளம்.

★ **மொத்த சனத்தொகை:** 84,200

★ **குடியிருப்புகள்:** பரவலான இடங்களில் வசிப்பதுடன், விவசாய நிலங்களுக்கு அருகாமையிலும் வீடுகளை அமைத்துக்கொள்வர்.

★ **ஜீவனோபாயம்:** தானியம் மற்றும் காய்கறி பயிரிடல், தச்சுத் தொழில், பிரம்பு பின்னல், நெசவு, கால்நடை வளர்ப்பு.

★ **மதம்:** இவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்தர்கள். மேலும், லாமா மதம் மற்றும் மூன் மதம் போன்றவற்றைப் பின்பற்றுபவர்களும் உள்ளனர்.



பங்
பழங்
உபச
★
வடகி
★
★ குடியிரு
அண்டியதாக
ஒரே நிலப்ப
மூங்கிலால் அ
★ ஜீவனோ
★ மதம்:
மதத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்குடிகள்

## குருக்



தெற்காசியாவிலுள்ள மிகப் பெரிய பழங்குடி இனங்களில் ஒன்றாகும். ஏனைய பழங் குடிகளிலிருந்து வேறுபடுகின் றனர். இவர்கள் கல்வி கற்றவர் கள். குருக் மொழியைப் பேசுகின்றனர். இந்த மக்கள் சங்கீதம் மற்றும் நடனங்களில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

★ **வாழும் பகுதி:** கிழக்கு-மத்திய இந்தியா, பங்களாதேஷ், பூட்டான்.

★ **மொத்த சனத்தொகை:** சுமார் 3.5 மில்லியன்.

★ **குடியிருப்புகள்:** களிமண்ணாலான வீடுகளுக்கு ஓடுகளைக் கொண்டு கூரை வேயப்படும். வீடுகள் அமைக்க பலகை, மூங்கில் என்பனவும் பயன்படுத்தப்படும்.

★ **ஜீவனோபாயம்:** பிரதானமாக விவசாயம், தேயிலை பயிர்ச்செய்கை.

## கிராவாரு



இந்த பழங்குடியைச் சேர்ந்த பெண்கள் தலைமுடியை இடது பக்கமாக வாரி ஒரு பந்துபோல் கட்டிக் கொள்வர். கைகளிரண்டிலும் வெள்ளிநிற வளையல்கள் அணிந்திருப்பர். அயலிலுள்ள தீவுகளில் வாழ்வோரைவிட வித்தியாசமான தோற்றம், கலாசாரம் மற்றும் மொழி களைக் கொண்டிருப்பர்.

★ **வாழும் பகுதி:** மாலைதீவின் கிராவாரு தீவுப்பகுதிகள்.

★ **மொத்த சனத்தொகை:** ஏனைய மக்களுடன் கலந்திருப்பதனால், சரியான கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியவில்லை.

★ **ஜீவனோபாயம்:** மீன்பிடி.

## வேடுவர்கள்



பண்டைய காலத்தில் இலை - குழைகளை ஆடைகளாக அணிந்தாலும், தற்போது துணிகளினாலான ஆடைகளை அணிகின்றனர். கோடரி மற்றும் ஈட்டி என்பன இவர்களின் அடையாளமாகக் கருதப்படுகின்றன.

★ **வாழும் பகுதி:** இலங்கையில் அனுராதபுர மாவட்டம், பதுளை மாவட்டம், (தம்பான), திருகோணமலை-மட்டக்களப்பு வரையான சில கரையோரப் பகுதிகள்.

★ **மொத்த சனத்தொகை:** 2,000 இற்கும் அதிகம்.

★ **குடியிருப்புகள்:** வனாந்தரத்தில் வாழும் இவர்கள், காடுகளில் கிடைப்பவற்றைப் பயன்படுத்தி வீட்டுக் கூரைகளை அமைத்துக்கொள்வர். சுவராக மரப்பட்டைகள், பலகை என்பன பயன்படுத்தப்படும்.

★ **ஜீவனோபாயம்:** வேட்டையாடுதல், விவசாயம், தேன் மற்றும் இறைச்சி விற்றல். அத்துடன், தற்போது இவர்களின் ஜீவனோபாய முறைகள் மாறுபட்டுள்ளன.

★ **நம்பிக்கைகள்:** மறுபிறப்பினை நம்புகின்றனர். இறந்தவர்களுக்காக பூசைகள், யாகங்கள் நடத்துகின்றனர்.

## சுரேல்



எளிமையான வாழ்க்கை வாழும் இவர்கள், ஆடல் - பாடல் மீது விருப்பம் உடையவர்கள்.

இந்த மக்கள் பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய வற்றை வாழ்க்கையின் மிக முக்கியமான அம்சங்களாகக் கருதுகின்றனர். விளைச் சலைப் பெற்ற பின்னர், முன்னோர்களை வழிபடும் பழக்கம் கொண்டவர்கள்.

★ **வாழும் பகுதி:** நேபாளத்தின் டொல்கா மாவட்டம்.

★ **மொத்த சனத்தொகை:** 200 இலும் குறைவு.

★ **குடியிருப்புகள்:** களிமண் வீடுகள்.

★ **ஜீவனோபாயம்:** விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள்.

## ச்சக்மா

பங்களாதேஷில் வசிக்கும் மிகப் பெரிய உள்நாட்டு பழங்குடி இனமாக இவர்கள் கருதப்படுகின்றனர். விருந்தினர் உபசரிப்புக்குப் பெயர்பெற்றவர்கள்.

★ **வாழும் பகுதி:** பங்களாதேஷின் சிட்டகொங் மலைப்பகுதிகள், வடகிழக்கு இந்தியா.

★ **மொத்த சனத்தொகை:** 550,000

★ **குடியிருப்புகள்:** நீரோடைகள் அல்லது ஆற்றங்கரைப் பகுதிகளை அண்டியதாக வீடுகளை அமைத்துக்கொள்வர். நெருங்கிய உறவினர்கள் ஒரே நிலப்பகுதிகளில் வீடுகளை அமைத்து வாழ்வர். பாரம்பரிய வீடுகள் மூங்கிலால் அமைக்கப்பட்டிருக்கும்.

★ **ஜீவனோபாயம்:** விவசாயம், மீன்பிடி, மூங்கில் வேலைப்பாடுகள்.

★ **மதம்:** தேரவாத பௌத்த மதத்தினைப் பின்பற்றுவதோடு, இந்து மதத்தையும் பின்பற்றுகின்றனர்.

## கலாஷா



கலாஷா மொழியினைப்பேசும் இவர்கள், பாகிஸ்தானின் மிகச் சிறிய மதக் குழுவாகக் கருதப்படுகின்றனர். ஏனைய இனத்தவர் களிலிருந்து தனிப்பட்டு வாழ்கின்றனர். பிரகாசமான நிறங்களைக் கொண்ட ஆடை களை அணிவர். கிரேக்க பாரம்பரிய தொடர்பும் உள்ளது. இவர்களுக்கென வேறுபட்ட கலாசாரபாரம்பரியங்கள் உள்ளன. இரவில் தீப்பந்தங்களைக் கொளுத்தி அதனைச் சுற்றி இருந்து நடனமாடுவர்.

★ **வாழும் பகுதி:** வடமேல் பாகிஸ்தானின் கித்ரால் மாவட்டம்.

★ **மொத்த சனத்தொகை:** 3,000

★ **குடியிருப்புகள்:** மரங்கள், களிமண் மற்றும் கற்களினால் வீடுகள் அமைக்கப் பட்டிருக்கும். வீடுகளில் இரண்டு மாடிகள் உள்ளன. ஜன்னல்கள் இல்லை.

★ **ஜீவனோபாயம்:** முன்னர் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு. தற்போது வியாபாரத்தில் ஆர்வம் காட்டுகின்றனர்.

★ **மதம்:** கலாஷா மதம் மற்றும் இஸ்லாம் மதம்.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்நட்சத்திரத்தில் மோதி பணியை நிறுத்திக்கொண்ட ரொசெட்டா விண்கலம்


2004 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம் உலக வரலாற்றில் முதன்முதலாக வால்நட்சத்திரமொன்றின் சுற்றுப்பாதையை நோக்கி ரொசெட்டா விண்கலத்தை ஏவியது. 67P/Churyumov-Gerasimenki (67P) எனும் வால்நட்சத்திரத்தின் சுற்றுப்பாதையை நோக்கியே இந்த விண்கலம் ஏவப்பட்டது. அது 2014 ஒகஸ்ட் 6 ஆம் திகதி குறித்த வால்நட்சத்திரத்தின் சுற்றுப்பாதையை அடைந்தது. ரொசெட்டா விண்கலத்திலுள்ள 'ஃபிலே' எனும் தளவூர்தி 2014 நொவெம்பர் மாதம் 12 ஆம் திகதி வால்நட்சத்திரத்தில் தரையிறங்கியது. புவியில் நீர் மற்றும் உயிர்கள் தோன்ற வால்நட்சத்திரங்கள் காரணமாக அமைந்தனவா? என்பதைக் கண்டறியும் நோக்கிலேயே ரொசெட்டா விண்கலம் அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும், சுமார் 2 வருடங்களாக பல்வேறு ஆய்வுகளை செய்து வந்த ரொசெட்டா, 2016 செப்டெம்பர் 30 ஆம் திகதி 67P வால்நட்சத்திரத்திலேயே மோதி தனது பணியை நிறைவு செய்தது.

**ஏரியன் 5 ரொக்கெட்**
இந்த ரொக்கெட்டின் உதவியுடனேயே, ரொசெட்டா விண்கலம் விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**2004 மார்ச் 2**
ரொசெட்டா விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கான முழுச் செலவு (பில்லியன் யூரோ)
1.3EUR

Rosetta
ரொசெட்டா நடவடிக்கையின் உத்தியோகபூர்வ இலச்சினை.




**புவியுடன் தொடர்பைப் பேணும் என்டெனா**
செய்திப் பரிமாற்றத்திற்கு 50 நிமிடங்கள் எடுக்கும்.

**ரொசெட்டா விண்கலம்**
இதன்மூலம் 11 விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

ரொசெட்டா விண்கலம் செயல்படுவதற்குத் தேவையான 850 வொட் மின்சக்தி, அதிலுள்ள சூரிய தகட்டின் உதவியுடனேயே பெற்றுக்கொள்ளப்பட்டது.

esa
ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை.





தளவூர்தியானது, பாதுகாப்பாக தரையிறங்குவதற்கு ஏற்றதாக வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பில் 5 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

வால்நட்சத்திரத்தின் புகைப்படங்களைப் பெறவும் அந்த இடத்தை அடையாளப்படுத்துவதற்காகவும் ரொசெட்டா விண்கலத்தில் அமைந்துள்ள OSIRIS எனும் கெமரா பயன்பட்டது.

**ரொசெட்டாவின் பணிகள்**
வால்நட்சத்திரத்தின் பிறப்பு, அதிலுள்ள தூசி மற்றும் அதன் வால்ப் பகுதி குறித்து கணிப்பீடு செய்தல், அங்கு காணும் ஏனைய காட்சிகளின் புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளல்.

விண்கலத்தின் நிறை (கி.கிராம்)
**3000**



**ஃபிலே தளவூர்தி**
வால்நட்சத்திரமானது, விண்வெளி வழியாக நிமிடத்திற்கு 20 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கின்றது.

தளவூர்தியின் நிறை (கி.கிராம்) **100**


67P வால்நட்சத்திரம் காட்சி அளிக்கும் விதம்.

**பரீட்சித்துப் பார்த்தல்**
ஃபிலே தளவூர்தியில் உள்ள எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீற்றரின் உதவியுடன் வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பில் அடங்கியுள்ள மூலப்பொருட்கள் குறித்த கணிப்பீடுகள் நடைபெறும். வானொலி சமிக்ஞை வழியாக வால்நட்சத்திரத்தின் ஆரம்ப உள்ளக அமைப்பு குறித்து ஆய்வு செய்ய எதிர்பார்க்கப்பட்டது. 8 சிறிய கெமராக்கள் மூலமாக வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பு தொடர்பான புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

இது தவிர, வாயுப் பகுப்பாய்வுமூலம் கூட்டு ரசாயன அணுவை இனங்காண ஒளி அணுக்களின் விகிதாசாரம் குறித்த தகவல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன.



**ஃபிலே தளவூர்தி**
10 ஆய்வுத் தொகுதிகளை தன்னகம் கொண்டிருந்தது.

**67P/Churyumov-Gerasimenko வால்நட்சத்திரம்**
முன்னாள் சோவியத் சமவுடமைக் குடியரசைச் சேர்ந்த Klim Ivanovych Churyumov மற்றும் Svetlana Ivanovna Gerasimenko ஆகிய இருவராலும் 1969 ஆம் ஆண்டு இந்த வால்நட்சத்திரம் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது சுமார் 4 கிலோமீற்றர் விட்டம் கொண்டது. தனது சுற்றுப்பாதையை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் 6.45 வருடங்களாகும்.

## ரொசெட்டா விண்கலத்தின் அழிவு

67P/Churyumov Gerasimenko வால்நட்சத்திரம் குறித்து மென்மேலும் தகவல்களை பெறும்பொருட்டு அதன் மேற்பரப்பிலிருந்து 19 கிலோமீற்றர் உயரத்திற்கு மேலெழும்புவதற்கு செப்டெம்பர் 29 ஆம் திகதி ரொசெட்டா விண்கலம் நடவடிக்கை எடுத்தது. அப்பொழுது வால்நட்சத்திரத்திலுள்ள வாயு, தூசி மற்றும் ப்ளஸ்மா சூழல் குறித்து அவதானிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இவற்றை புகைப்படங்கள் எடுப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தது. எனினும், மீண்டும் அதன் தரையிறக்கம் வெற்றிபெறாத நிலையில் குறித்த வால்நட்சத்திரத்துடனேயே விண்கலத்தை மோதச்செய்து அழிக்கப்பட்டது.

**2016 செப். 02**
தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்த ஃபிலே தளவூர்தி ரொசெட்டாவினால் கண்டுபிடிக்கப்பட்டது

**2016 செப். 30**
67P வால்நட்சத்திரத்துடன் மோதி ரொசெட்டா கலம் முற்றாக அழிந்தது.


ரொசெட்டா மூலம் கிடைக்கப்பெற்ற 67P வால்நட்சத்திரத்தின் இறுதிப் புகைப்படம்.

**தளவூர்தியின் வடிவமைப்பு**


**துளை கருவி**
வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பில் துளையிட்டு ஆதாரம் ஒன்றை நட இது பயன்படுத்தப்பட்டது. ஏற்பட்ட உணர்வலைகளின்மூலம் மண்ணின் கனம் மற்றும் மேற்பரப்பு வெப்பநிலை குறித்த தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**கண்டுபிடிப்புகள்**

**2015 செப்டெம்பர்**
- வால்நட்சத்திரத்தின்மீது ஆகன் வாயு இருக்கின்றமை.
- வால்நட்சத்திரத்தின் தோற்ற அமைப்பிற்கான காரணம்.

**2015 ஒக்டோபர்**
- வால்நட்சத்திரத்தின் மீது ஒட்சிசன் இருக்கின்றமை.

**தளவூர்தியின் பாதம்**
தளவூர்தியை மீண்டும் மேல்நோக்கி எழுப்புவதற்காக சுழலுவதற்கு அல்லது மேல் எழுப்புவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.


ஃபிலே தளவூர்தியூடாக பெறப்பட்ட 67P வால்நட்சத்திரத்தின் புகைப்படம்.

"ரொசெட்டா மீண்டும் ஒரு முறை வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. இந்த நடவடிக்கையின்போது, வெற்றிகளைப் போலவே, தோல்விகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது"

– ஜொஹான் டெய்ட்ரிச் வொர்னர்
ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலைய பணிப்பாளர் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களிடையே அதிக பயன்பாட்டிலுள்ள உலோகங்கள்





பண்டைய காலம் தொட்டு மனிதர்கள் உலோகங்களினால் பல்வேறு பயன்களைப் பெற்று வந்திருந்தனர். அன்றிலிருந்து இன்றுவரை உலோகங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. பொதுவாக, நாம் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்து உபகரணங்களிலும் உலோகங்கள் கலந்திருக்கின்றன. மிகக் குறுகிய காலத்தில் ரசாயன மாற்றங்களுக்கு உட்படாத உலோகங்களே, மனிதனால் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற உலோகப் பொருட்கள் தயாரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.



## தங்கம்

தங்கத்தாலான ஆபரணங்கள் ரசாயனத் தாக்கங்களுக்கு உட்படுவது குறைவு. மிகவும் புராதன காலத்தில் பயன்படுத்திய தங்க நாணயங்கள், தங்க ஆபரணங்கள் இன்றுவரை துருப்பிடிக்காது மின்னுவதைக் காணலாம். தங்கத்தால் செய்யப்பட்ட மாலை, காதணி, மோதிரம் போன்றவை சாதாரணமாக எந்த நேரமும் அணிந்திருக்கும் ஆபரணங்களாகும். ஒவ்வொரு நாளும் வியர்வை, சவர்க்காரம் என்பன தங்க ஆபரணங்களில் படுகின்றன. சிலவேளைகளில் ரசாயனப் பதார்த்தங்களும் அவற்றில் படலாம். இவ்வாறான நிலையிலும்கூட, சுத்தமான தங்க ஆபரணங்களில் எந்தவொரு மாற்றத்தையும் காண முடியாதிருக்கும். தங்கம் பெறுமதி மிக்க உலோகமாக இருப்பதற்கான காரணமும் இதுவாகும்.

## வெள்ளி

புராதன காலத்திலிருந்து இன்றுவரை நாணயங்கள் மற்றும் ஆபரணங்கள் செய்வதற்கு வெள்ளி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுவாக, வெள்ளியும் வேறு எந்தப் பொருட்களுடனும் தாக்கம் புரிவது குறைவு. இதுவும் பிரகாசத்தன்மை உடைய ஓர் உலோகமாகும். எனினும், இன்றைய காலத்தில் நிகழ்கின்ற அதிக சுற்றாடல் பாதிப்புக்கள் காரணமாக வெளியேறும் ஐதரசன் சல்ஃபைட் மூலம் வெள்ளி ஓரளவு மங்கிய நிறத்தைப் பெறுகின்றது.

## செம்பு

செம்பு என்பதும் பண்டைய காலம் தொட்டுப் பயன்படுத்தப்பட்டு வரும் ஓர் உலோகமாகும். இந்த உலோகம் தனியோர் உலோகமாக புவியில் காணப்படுகின்றது. மின் கம்பிகள் மற்றும் இலத்திரனியல் சேர்க்கிட்களிலும் செம்புக் கம்பிகளே பயன்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம், இது சிறந்த மின் கடத்தியாகவும் குறைந்த விலையில் பெறக்கூடியதாகவும் இருக்கின்றமையால் ஆகும். மேலும், சிறந்த வெப்பக் கடத்தியாகவும் செம்பு உள்ளது. இதனால், செம்புப் பாத்திரங்களை தயாரித்து பயன்படுத்துவது முற்காலத்தில் இருந்தே பழக்கத்தில் உள்ளது.

## நிக்கல்

அலங்காரப் பொருட்களை தயாரிப்பதற்கு நிக்கல் சில்வர் என்ற கலப்புலோகம் பயன்படுத்தப்படுகின்றது. இதில் 60% செம்பு, 20% துத்தநாகம் மற்றும் 20% நிக்கல் என்பன அடங்கியிருக்கும். இரும்புப் பொருட்கள் பளிச்சிடுவதற்கு அவற்றின் மேல் நிக்கல் பூச்சுப் பூசப்படுகின்றது.

## இரும்பு

குறுகிய காலத்தில் துருப்பிடிக்கும் தன்மை கொண்டிருப்பதால் இரும்பினால் செய்யப்பட்ட நீர்க் குழாய்களின் பயன்பாடு தற்காலத்தில் மிகவும் குறைந்துவிட்டது. இரும்புப் பொருட்களில் வர்ணப்பூச்சுகளை பூசுவதனூடாக, துருப்பிடித்தலை தாமதப்படுத்தலாம். கைத்தொழிலுக்காகவே இரும்பினை அதிகம் பயன்படுத்துகின்றனர். உலகில் பரவலாக இருக்கும் ஓர் உலோகமாக இரும்பு கருதப்படுகின்றது. இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் தயாரிப்பில் இரும்பே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

## அலுமினியம்

உலகில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற ஓர் உலோகமாக அலுமினியம் உள்ளது. சமையல் பாத்திரங்கள் தயாரிப்பிலும் அலுமினியம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பயன்பாட்டில் உள்ள இலகு தன்மை, வளையும் தன்மை மற்றும் அதனை சூழவுள்ள மெல்லிய ஒக்சைட் பாதுகாப்புப் படலம் என்பன அலுமினியத்தின் சிறப்பியல்புகளாகும். விமான உற்பத்தியிலும் ஏனைய போக்குவரத்து சாதன உற்பத்திகளிலும் அலுமினியமே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

(-அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: දුව, සවස නැන්දලගේ ගෙදර යමු.
துவ, சவச நென்தலகே கெதர யமு.
**அம்மா:** மகள், பின்னேரம் மாமி வீட்டுக்குப் போவோம்.

දුව: ඒ ඇයි අම්මේ?
ஏ எய் அம்மே?
**மகள்:** அது ஏன் அம்மா?

අම්මා: නැන්දගේ දුව ඉස්පිරිතාලයෙන් ආවාට පස්සේ එයාව බලන්නත් ගියේ නැහැ.
நென்தகே துவ இஸ்பிரிதாலயென் ஆவாட்ட பஸ்ஸே எயாவ பலன்னத் கியே நெஹெ.
**அம்மா:** மாமியின் மகள் வைத்தியசாலையில் இருந்து வந்த பின்னர் அவளைப் பார்க்கவும் போகவில்லை.

දුව: කීයට ද යන්නේ අම්මේ?
கீயட்ட த யன்னே அம்மே?
**மகள்:** எத்தனை மணிக்குப் போவது அம்மா?

අම්මා: සවස 5:00 ට විතර යමු.
சவச 5:00 ட்ட (பஹட்ட) வித்தர யமு.
**அம்மா:** பின்னேரம் 5:00 மணி அளவில் போவோம்.

: නැන්දා අපට රෑ කෑමත් ලැහැස්ති කරනව කිව්වා.
நென்தா அபட்ட ரே கேமத் லெஹெஸ்தி கரனவ கிவ்வா.
: மாமி எங்களுக்கு இரவுச் சாப்பாடும் ஆயத்தமாக்குவதாகச் சொன்னார்.

දුව: එතකොට තාත්තා?
எதகொட்ட தாத்தா?
**மகள்:** அப்படியென்றால் அப்பா?

අම්මා: තාත්තා නැන්දලගේ ගෙදර එනව කිව්වා.
தாத்தா நென்தலகே கெதர எனவ கிவ்வா.
**அம்மா:** அப்பா மாமியின் வீட்டுக்கு வருவதாகச் சொன்னார்.

දුව: එහෙනම් මම මගේ පාසලේ වැඩ ඉවර කරගන්නම්.
எஹெனம் மம மகே பாசலே வெட இவர கரகன்னம்.
**மகள்:** அப்படியானால் நான் எனது பாடசாலை வேலைகளை முடித்துக்கொள்கிறேன்.

අම්මා: ඒක හොඳයි දුව.
ஏக ஹொந்தய் துவ.
**அம்மா:** அது நல்லம் மகள்.

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. නැන්දලගේ ............ යමු.
2. ගෙදර එනව ..............
3. මගේ ................ වැඩ.
4. කීයට ද යන්නේ ............?




**தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்**
**Direct speech & Indirect speech**

**வினா நிலை வாக்கியங்களை** (Interrogative Sentence) **தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலைக்கு மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே பயில்வோம்.**

அ) The teacher asked me, "Can you do this work?"
ஆசிரியர் என்னிடம் கேட்டார், ''உன்னால் இந்த வேலையை செய்ய முடியுமா?'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The teacher asked me whether I could do that work.
என்னால் இந்த வேலையைச் செய்ய முடியுமா என ஆசிரியர் என்னைக் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு: மேற்படி (அ) தன் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில் காணப்படுகின்ற,** "Can you do this work" **எனும் வினா வாக்கியம், பிறர் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில்,** "Whether I could do that work" **என மாற்றம் அடைந்துள்ளதை அவதானிக்கலாம்.**

★———★———★———★

இ) Mother asked Ragu, "Why did you come late?"
தாய் ரகுவிடம் கேட்டார், ''நீ ஏன் தாமதமாக வந்தாய்?'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Mother asked Ragu why he had come late.
நீ ஏன் தாமதமாக வந்தாய் என தாய் ரகுவிடம் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு: மேற்படி (இ) தன் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள,**"Why did you come late" **எனும் வினா வாக்கியம், பிறர் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில்,** "Why he had come late" **என மாற்றம் அடைந்துள்ளதை கவனத்தில்கொள்ள வேண்டும்.**

★———★———★———★

உ) The teacher asked Ravi, "What have you written?"
ஆசிரியர் ரவியிடம் கேட்டார், ''நீ என்ன எழுதியுள்ளாய்'' என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) The teacher asked Ravi what he had written.
நீ என்ன எழுதியுள்ளாய் என ஆசிரியர் ரவியிடம் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு: மேற்காணும் (உ) மற்றும் (ஊ) வாக்கியங்களின்படி; தன் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள,** "What have you written" **என்பது, பிறர் கூற்று (ஆங்கில) வாக்கியத்தில்** "What he had written" **என மாற்றம் அடைந்துள்ளதை அவதானிக்கலாம்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாஹிரா சுப்பர் 16:

# வெஸ்லி கல்லூரி செம்பியன்

கொழும்பு மருதானை சாஹிரா கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கத்தினால் 12 ஆவது தடவையாகவும் நடத்தப்பட்ட அணிக்கு ஏழு பேரைக் கொண்ட சுப்பர் 16 கால்பந்தாட்டப் போட்டியில், வெற்றிக் கிண்ணத்தை கொழும்பு வெஸ்லி கல்லூரி சுவீகரித்தது.




இறுதிப் போட்டியில் கொழும்பு, மருதானை சாஹிரா கல்லூரியும், வெஸ்லி கல்லூரியும் மோதியதில் 3-2 என்ற பெனால்டி எண்ணிக்கையில் வெஸ்லி கல்லூரி வெற்றியீட்டியது.

மேற்படி இறுதிப் போட்டியின்போது, இரண்டு அணிகளுமே எந்தவொரு கோலும் போடாமையினால் மேலதிக நேரம் வழங்கப்பட்ட போதிலும், அதிலும் இரண்டு அணிகளும் கோல்கள் எதுவும் பெறாமையினால் பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படியே 3-2 என்ற கணக்கில் வெஸ்லி கல்லூரி செம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி-கண்டி திரித்துவக் கல்லூரி ஆகியன மோதியதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாம் இடத்தைப் பெற்றது.




## கோலூன்றிப் பாய்தலில் யாழ். மாணவனுக்கு தங்கம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 32 ஆவது விளையாட்டுப் போட்டியில் 17 வயதிற்குட்பட்டோருக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ஏ.புவிதரன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். 3.80 மீற்றர் உயரத்தைப் பாய்ந்தே இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் முதல் தடவையாகவே இப்போட்டியில் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## செரீனா இல்லாத டென்னிஸ் சோபையிழப்பு



கடந்த 23 ஆம் திகதி சிங்கப்பூரில் ஆரம்பமாகிய மகளிர் டென்னிஸ் போட்டிகளில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் கலந்து கொள்ளாமை ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றமாக அமைந்துள்ளதுடன் போட்டிகளில் சோபை இழந்த தன்மையை தோற்றுவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தோற்பட்டையில் ஏற்பட்ட உபாதையினாலேயே இப்போட்டிகளிலிருந்து ஒதுங்குவதாக செரினா வில்லியம்ஸ் தெரிவித்திருந்தார். செரினா வில்லியம்ஸைப் போலவே பிரிட்டனின் நம்பிக்கை நட்சத்திரமான ஜொஹானாவும் உடல் உபாதை காரணமாக, இப்போட்டியில் கலந்துகொள்ளாமை போட்டியின் சோபை இழப்பிற்கு மற்றுமொரு காரணமாகவும் கருதப்படுகின்றது.

இப்போட்டியில் உலக மகளிர் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் முதல் 8 இடங்களை வகிக்கின்ற வீராங்கனைகள் மோதுவதுண்டு. எனினும், குறித்த இரண்டு வீராங்கனைகள் கலந்துகொள்ளாமையினால் 9 ஆம் மற்றும் 10 ஆம் இடங்களில் உள்ள வீராங்கனைகளுக்கு இந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. இறுதிப் போட்டி ஒக்டோபர் 30 ஆம் திகதி நடைபெறும்.



## அஃப்ரிடி எழுதும் சுயசரிதை நூல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சஹிட் அஃப்ரிடியினால் எழுதப்பட்ட சுயசரிதை நூல் அடுத்த வருடம் வெளியிடப்படவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கிரிக்கெட் களத்தில் பல சவால்களையும், ஏற்ற இறக்கங்களையும் சந்தித்தவர் அஃப்ரிடி. சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே தனது கருத்துக்களைத் தெரிவித்து விமர்சனங்களையும் ஏற்படுத்தியவர். அதேபோல் பாகிஸ்தான் அணிக்காக பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தவர். இவ்வாறான அடையாளங்களைக் கொண்ட அஃப்ரிடி தனது சுயசரிதை நூலில் பலவித கோணங்களில் பரவலான விடயங்களை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




## காடிஃப் மெரதன் போட்டி ஒத்திவைப்பு



அடுத்த வருடம் 2017 இல் நடைபெற ஏற்பாடாகியிருந்த 'காடிஃப்' மெரதன் போட்டி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்படி இப் போட்டிகள் 2018 ஆம் ஆண்டே நடைபெறும் என்று பிரிட்டன் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். முன்னைய திட்டத்தின்படி அடுத்த வருடம் ஏப்ரல் மாதமே இப்போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. 'காடிஃப்' நகரிலேயே இப்போட்டிகள் நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட சில தினங்களிலேயே இவ்வாறு போட்டி ஒரு வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உண
# கண்டுபிடி




எமது நாட்டில் உள்ள போஷாக்கு மிக்க பல்வேறு வகையான பழங்களும் காய்கறிகளும் போன்று உலகின் வேறு எந்த நாடுகளிலும் விளைவதில்லை. இதனால், நம் நாட்டில் காணப்படுகின்ற போஷாக்கு உணவுகளை இனங்கண்டு, உட்கொள்வதால் சிறப்பான மனிதவளத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

## நீங்கள் உட்கொள்ளும் உணவுகள்

கடந்த வாரம் நீங்கள் உட்கொண்ட உணவுகள் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் சோறுடன் ஒரே விதமான சில வகை காய்கறிகளையும் கீரைகளையும் பழங்களையும் மட்டும் உட்கொண்டிருப்பீர்கள். அவைகளை தவிர்த்து சுற்றாடலில் பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் உள்ளது. அதனை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

## உணவுகளின் தன்மையை குறித்துக்கொள்ளுங்கள்

நீங்கள் வாழும் சுற்றாடலில் பலதரப்பட்ட காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரை வகைகள் இருக்கக் கூடும். அவற்றை வயது வந்தவர்களிடம் கேட்டறிந்து குறிப்பொன்றில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் இவை எல்லாம் உங்கள் உணவு வேளைகளில் உள்ளடங்கியுள்ளனவா? என்பதை நீங்கள் கவனித்துள்ளீர்களா?

நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள உணவுகளை பற்றி குறிப்பெடுக்கையில் உணவுகள் தொடர்பான நிறம், விசேட அம்சம், உட்கொள்ள வேண்டிய விதம் போன்றவற்றை குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இதன்மூலம் சுற்றாடலில் கிடைக்கக் கூடிய உணவுகளை எவ்வாறு உட்கொள்வது? அதன் தன்மை பற்றி உங்களால் அறிந்துகொள்ள முடியும்.

## உணவுகளைப் பற்றிய குறிப்புகளால் ஏற்படும் நன்மை

உணவுகளை நிறம், வடிவம் மற்றும் சுவை ஆகியவற்றினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குறிப்புகளை எழுதக்கூடாது. அத்தோடு, அந்த உணவுகளில் எமக்குக் கிடைக்கும் விற்றமின்கள், போஷாக்கு மற்றும் கனியுப்புகள் பற்றியும் குறிப்புகளை எழுத வேண்டும்.

சில காய்கறிகள், பழங்கள் ஆகியன புற்றுநோய், இதயநோய், நீரிழிவு, கொலஸ்ட்ரோல் போன்ற பல நோய்களை இயற்கையாகவே குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. நீங்கள் எப்பொழுதும் ஒரே வகையான உணவுகளை உட்கொள்வதனால் உங்களுக்கு ஒரே விதமான விற்றமின்களே உடலுக்கு கிடைக்கும். வெவ்வேறான உணவுகளை எமது உணவுகளில் சேர்க்கும்போது, சுவை அதிகரிக்கும். அதனால், பலவிதமான சத்துக்கள் கிடைப்பதனால் உடலின் போஷாக்குத் தேவை முழுமையடையும்.







இதனால் உங்கள் உடல் வளர்ச்சியும் அறிவாற்றலும் உடல் பலமும் அதிகரிக்கும்.




## வீட்டு உணவில் வெவ்வேறு காய்கறிகளை சேர்ப்பதால்

கடைகளில் உள்ள உணவுகள் வாங்குவதை தவிர்த்து, உங்கள் சுற்றாடலில் கிடைக்கும் கீரைகள், பழங்கள், காய்கறிகளை சமைக்க அம்மாவிற்கு உதவுங்கள். வாரத்திற்கு இருமுறை கீரை வகைகளை உணவில் சேர்த்து உட்கொள்வது கட்டாயமாகும்.

சோறுதான் எமது பிரதான உணவு வேளை ஆகும். அந்த சோறுடன் பலதரப்பட்ட நிறங்கள் கொண்ட காய்கறிகள் உள்ளடங்க வேண்டும். கீரை வகை, புரோட்டீன் அடங்கிய உணவுகளான மீன், இறைச்சி, கௌப்பி, கடலை, பருப்பு, முட்டை என்பனவும், கொழுப்பு உணவு (முந்திரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வு வகைகளைக் ந்து சுவைப்போம்



நிலக்கடலை அல்லது கறியில் எண்ணெய்) இருக்க வேண்டும். உணவின் [illegible]ன்னர் பழங்கள் உட்கொள்ள வேண்டும்.

எனினும் இலங்கையர்கள் உட்கொள்ளும் சோறின் அளவு அதிகமாகும்.

எனவே அதற்கு மாறாக சோற்றின் அளவினைக் குறைத்து ஈரப்பலா, பலா, சீனிக்கிழங்கு போன்ற வற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.உணவில் அரைவாசியில் மூன்றில் ஒரு பங்கு காய்கறி களும், கீரைகளும் இருக்க வேண்டும். எஞ்சிய பகுதியில் இறைச்சி, மீன், முட்டை என்பன இருக்க வேண்டும்




## வீட்டுத்தோட்டத்திலிருந்து கிடைக்கும் உணவுகளின் நன்மைகள்

நாம் கொள்வனவு செய்யும் பழங்கள் மற்றும் காய்கறிகள் பழுதடையாமல் இருப்பதற்கு மருந்துகள் சேர்க்கப்படுகின் றன. இவ்வாறான காய்கறி களையும், பழங்களையும் நன்கு கழுவினாலும் இரசாய னங்கள் விலகாது, அது உடலில் கலந்துவிடும் வாய்ப்பு அதிகமாகும். இதனால் மிகவும் மோசமான நோய்கள் எமக்கு ஏற்படுகின்றன. வீட்டுத்தோட்டத்தில் கிடைக்கும் காய்கறிகள், பழங்கள், கீரை வகைகளில் இரசாயனங்கள் இல்லை. இவற்றில் போஷாக்கு மட்டுமே உள்ளடங்கி யுள்ளது.

## பல்வேறு பயிர்ச்செய்கைக்கு உங்களது தோட்டத்தில் ஓரிடம் ஒதுக்குங்கள்

உங்களது தோட் டத்தில் பலதரப்பட்ட காய்கறி விதைகள், பழ விதைகளை நடுங்கள். கீரை வகைகளையும் நட முடியும். அவற்றின் வகைகளைப் பற்றியும் போஷாக்கு பற்றியும் கவனம் செலுத்துங்கள். அவற்றுக்கு இயற்கை பசளைகளை இடுங்கள். இதனால் ஆரோக்கியமான உணவினை உங்களால் பெறமுடியும்.

(-இ)




# தெரிந்து கொள்வோம்



★ அதிகாரப் பிரிவு கோட்பாட்டினை அறிமுகப்படுத்தியவர் யார்?

மொன்டெஸ் கியூ



★ பங்களாதேஷில் உள்ள 'கிராமின் வங்கி' முறையை உருவாக்கியவர் யார்?

முகமது யூனுஸ்




★ 'பீமன் எயார்' எனும் விமான சேவை எந்த நாட்டிற்குரியது?

பங்களாதேஷ்



★ 'பெரிய ஆப்பள்' என்ற பெயரால் அழைக்கப் படும் நகரம் எது?

நியூயோர்க்

★ அநுராதபுரத்தில் புராதான தூபிகளை அமைத்த மன்னர்கள் யார்?

i. துட்டகைமுனு - ருவன்வெலிசாய, மிரிஸ்வதிய
ii. வலகம்பாகு - அபயகிரி
iii. மகாசேனன் - ஜெதவனராம



★ ஹிட்லரின் இரகசியப் பொலிஸின் பெயர் என்ன?

கெஸ்டபோ



★ கண் தானத்தின்போது கண்ணின் எப்பகுதி தானமாக வழங்கப்படும்?

கரு விழிகள்



★ மூன்று தலைநகரங்களை கொண்ட நாடு எது?

தென்னாபிரிக்கா



★ நெல்சன் மண்டேலா எப்போது சிறையில் இருந்து விடுதலை பெற்றார்?

1990 ஆம் ஆண்டு
பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சிறுவர் தினத்தையொட்டி காத்தான்குடி எஃப்.எம். மீடியா யுனிட் இனால் அண்மையில் உலக சிறுவர் தின கொண்டாட்டங்களும் சான்றிதழ் வழங்கும் விழாவும் காத்தான்குடி அஹமது லெப்பை ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் 2016 ஆம் ஆண்டில் தரம் 05 மாணவர்களுக்கான எஃப்.எம்.மீடியா யுனிட் நடாத்திய புலமைப்பரிசில் கருத்தரங்கு மற்றும் பரீட்சையிலும் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளையே இங்கு காண்கிறீர்கள்.

(ஜுனைட் எம்.பஹ்த்)





விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு




எஸ்.ஒக்ஷான்,
தெஹி/பூனுகல தமிழ் வித்தியாலயம்,
எட்டியாந்தோட்டை.




என்.முஹம்மத்,
களு/அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை,
பேருவளை.



ஜெ.சமன்ராஜ்,
கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி.



ஆர்.மரியம்,
பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை.



ச.பரணிதரன்,
கொ/இந்துக் கல்லூரி,
பம்பலப்பிட்டி.



செ.ஜெயகாந்த்,
இ/எம்.பி.பரியோவான் தமிழ் கல்லூரி,
இறக்குவானை.



கே.ஆகேஷ்,
தம்புள்ள தமிழ் மகா
வித்தியாலயம்,
போகாவத்தை.



ஜெ.கவினியா,
ஹைலன்ஸ் கல்லூரி,
ஹட்டன்.




எம்.சதீக்,
க/ஜப்பார் மத்திய கல்லூரி,
கலகெதர.

# பாறைகளின் கட்டமைப்புகள்

எமது புவியில் பல்வேறு விதமான பாறைக் கட்டமைப்புகளைக் காணலாம். இத்தகைய பாறைகள் புவித்தரைக் கட்டமைப்புக்கு மேலும் கீழும் காணப்படுகின்றன. இவற்றை தீப்பாறைகள், அடையற் பாறைகள், உருமாறிய பாறைகள் என வகைப் படுத்தலாம். இவற்றில் தீப்பாறை என்பது தரையின் கீழ் 30 மீற்றர் ஆழத்தில் 5000C° வெப்பநிலையில் காணப்படும் திரவநிலைப் பாறைகளாகும். இவை மக்மா அல்லது பாறைக் குழம்புகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

அடையற் பாறைகள் என்பது சேற்றுக்கல், உருண்டைக் கற்றிரள், கனிக்கல், மணல்கல் என்பனவாகும்.





இவை குளிர், வெப்பம், நீர், காற்று என்பனவற்றின் மூலம் பாறைகள் அழிவடைந்து உருவாகின்றன. இத்தகைய செயற்பாடுகள் 'பாறைகள் வானிலையாலழிதல்' என அழைக்கப்படுகின்றது. உருமாறிய பாறைகள் என்பது, தீப்பாறைகளும் அடையற் பாறைகளும் தரையின் உட்பகுதியில் உள்ள அமுக்கம் மற்றும் வெப்பத்தால் உருமாற்றம் அடைவதன் மூலம் உருவாகின்றவையாகும். அந்தவகையில், அடையற் பாறையானது, சுண்ணாம்புக்கல் மற்றும் சலவைக் கல்லாக உருமாற்றம் அடைகின்றது. தீப்பாறையானது, கருங்கல் மற்றும் நெயிஸ் எனப்படும் பாறையாக உருமாற்றம் அடைகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்போது கைகளைத் தட்டுவது, கரகோஷம் செய்வது மேற்கத்தேய நாட்டவரின் பழக்கங்களில் ஒன்றாகும். இந்த பழக்கமே பல நோய்களுக்கு மருந்தாக செயற்படுவது உங்களுக்கு தெரியுமா? அதனைப் பற்றிய விபரங்கள் வருமாறு:




# கைகளைத் தட்டுவதால் நோய்கள் குணமாகுமாம்...

நம் உடலின் ரத்த நரம்புகளில் ஏற்படும் அடைப்பே பல நோய்களுக்கு அடிப்படைக் காரணமாகும். இவ்வாறு அடைப்புகள் உருவாகுவதால் ரத்த ஓட்டம் குறைந்து உடலுக்கு தேவையான ஒட்சிசன், உடல் வளர்ச்சி என்பவையும் தடைப்பட வாய்ப்புண்டு. இதனை தடுக்கும் நோக்கில் ஆய்வுகளை மேற்கொண்டபோது நமது உடல் உறுப்புகளின் நரம்பு நுனிகள் கைகளில் முடிவடைகின்றமையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.



அதனால், இரு கைகளை தட்டும்போது ஏற்படும் அதிர்வானது, நரம்பு மண்டலத்திலுள்ள தேவையற்ற முடிச்சுகளையும் அடைப்புகளையும் நீக்கி சீராக்குவதுடன், உணர்வுகளை சீர்செய்கின்றது.

இதனால், இரத்த அடைப்பு நீங்குவதினால் இரத்த ஓட்டம் தங்கு தடையின்றி சீராக நடைபெறுகின்றது. இதன்போது உடலில் 90% மான நோய்கள் குணமாகின்றது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.



இதன்படி, ஒரு நாளைக்கு 20 நிமிடங்களுக்கு 60 முதல் 100 தடவை வரை கைகளை தட்டலாம். இதன்மூலம் இரத்த அழுத்தம், இதய நோய், சர்க்கரை நோய் மற்றும் எலும்பு தொடர்பான நோய்களும் குணமாகும். இவ்வாறு கைகளை தட்டுவதால் மனம் அமைதி அடைவதோடு சுவாசம் சீராகின்றது என உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். சூழலுக்கேற்ப சத்தம் எழுப்பாமல் கை தட்டுவதிலும் இப்பயனை பெறலாம். இந்த பயிற்சியை புதுவித யோக பயிற்சியாக உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வெல்லுங்கள்! விஜய் — தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*12.10.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*
**1857**
**Pendrive** வெற்றியாளர்:
ஆர்.சர்மினா,
515/116, லயன்ஸ் வீதி,
பூம்புகார், மட்டக்களப்பு.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி (26.10.2016) விஜய் த.பெ.இல 2837 கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
**26.10.2016**
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனது அழகிய நகரம்

## "My Beautiful City" ஓவியப் போட்டி

• குமமோத்தோ யுனெஸ்கோ அமைப்புடன் சைல்ட் ஆர்ட் ஸ்டுடியோ நிறுவனம் இணைந்து சிறுவர்கள் ஓவிய போட்டி மற்றும் ஓவிய கண்காட்சிகளை ஏற்பாடு செய்துள்ளன.

• சிறுவர்களின் ஓவிய படைப்புக்கள் மூலம் அவர்கள் வாழ்கின்ற சூழல் கலாசார பாரம்பரியங்கள் போன்றவற்றை சர்வதேச சமூகத்துடன் பகிர்ந்துக் கொள்வதற்கான உன்னத வாய்ப்பை ஏற்படுத்துவதே இதன் முக்கிய இலக்காகும்.

• 'எனது அழகிய நகரம்' என்ற தலைப்பில் போட்டியாளர்கள் ஓவியங்களை வரையலாம். அதற்கமைய எனது அழகிய நகரை நான் எவ்வாறு உணர்கின்றேன். நகரைப் பற்றி என்ன நினைக்கின்றேன். அது எந்தளவு அழகானது அங்கு மனிதர்கள், மிருகங்கள், மரம், செடி கொடிகள் என்பன வாழ்வதற்கேற்ற சூழல் அமையப்பெற்றுள்ளதா? இவ்வாறான சூழல் அமைவதற்கு என்னால் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும். இவ்வாறான பல விதமான சிந்தனைகள் கற்பனைகள் உங்களுள் எழலாம்.... அவற்றையே உங்கள் கற்பனை வளமாகக் கொண்டு போட்டிக்கான ஓவியத்தை வரையலாம்.

* **போட்டி பற்றி விபரங்கள்**
*தலைப்பு* - எனது அழகிய நகரம் (My Beautiful City)

*படைப்பின் தரம்* - ஓவியத்தின் சித்தரிப்பு, கற்பனை வளம் ஆகியன புதுமையான வடிவில் அமைக்கக் கூடியதான கருதூன்றியதாக இருத்தல் நல்லது.

* *ஊடகம்* - எந்தவொரு விரும்பிய ஊடகத்தையும் பயன்படுத்தமுடியும்.

* *ஓவியத்தின் அளவு* - 38cm x 54cm

* *வயதெல்லை* - 4 தொடக்கம் 15 வயது வரையிலானவர்கள் பங்குபற்றலாம். (2016 - நொவெம்பர் 11 ஆம் திகதிக்கு)

* **பரிசு விபரம்** - முதலாமிடம் ஜப்பானின் குமமோத்தோ UNESCO அமைப்பின் தலைவர் நினைவு விருதுடன் பதக்கம்.
இரண்டாம் இடத்திற்கான இரண்டு பரிசுகள்
விசேட விருதுகள் 9
பாராட்டு விருதுகள் 38

* **போட்டி இறுதித் திகதி** - 2016 நொவம்பர் 11

*தபாலிடும் போது* - ஓவியத்திற்கு சேதம் ஏற்படாதவாறு மடிப்புக்கள் இன்றி பாதுகாப்பாக தபாலிடுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பணிப்பாளர்
Child Arts Studio
My Beatiful City
34, சர்கர வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு-04.

இந்த சித்திரப் போட்டியில் சிறந்த விருதினை பெறும் வெற்றியாளர் கல்வி கற்கின்ற பாடசாலைக்கும் விசேட பாராட்டு சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் சிறப்புப் படைப்புக்கள் ஜப்பானின் குமமோத்தோ யுனெஸ்கோ அமைப்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வெற்றிக்குரிய சிரேஷ்ட நடுவர் குழுவினால் வெற்றிக்குரிய ஓவியங்கள் தெரிவு செய்யப்படும்.

இங்கு காணப்படும் மாதிரி விண்ணப்பட்டிவத்தை ஒத்த விண்ணப்படிவமொன்றை தயாரித்து விபரங்களை குறிப்பிட்டு பாடசாலை அதிபரின் முத்திரையிடப்பட்ட கையொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

* மேற்படி முடிவுகள் 2016 டிசம்பர் 20 ஆம் திகதியின் பின்னர் அறிவிக்கப் படும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

எனது அழகிய நகரம் - குமமோத்தோ UNESCO ஓவியப்போட்டி -2016

பெயர்- ..............................(ஆண்/ பெண்)
Name in English- ..............................
(Capital Letter)
வயது -..............................
(வருடங்கள்/ மாதம்/ நாள்)
பிறந்த திகதி -..............................
(வருடங்கள்/ மாதம்/ திகதி)
முகவரி: (ஆங்கிலத்தில்)..............................
..............................
தொ.பே.இல -..............................
பாடசாலையின் பெயர் - (ஆங்கிலத்தில்)
..............................
..............................
பாடசாலை முகவரி -(ஆங்கிலத்தில்)
..............................
..............................
தொ.பே.இல-..............................
மாவட்டம்-..............................
பாடசாலை உரித்துடைய மாகாண கல்வி அலுவலகம் ..............................
இந்த ஓவியப் படைப்பானது மேல் குறிப் பிட்டுள்ள போட்டியாளரால் வரையப்பட்ட தென்பதை உறுதிப்படுத்துகின்றேன்.
ஓவியப்பாட பொறுப்பாசிரியரின் பெயர் -
..............................
அதிபர் .............................. திகதி ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த களத்தில் வாழ்ந்தாலும் போர் குறித்து அறியாத வகீஹ் கோத்திரத்தார்





ஆப்கானிஸ்தான், மற்றும் ஆப்கான், பாகிஸ்தான் எல்லைகளில் உள்ள பிரதேசங்கள் பல வருடங்களாக நடக்கும் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் உலகின் பயங்கரமான பிரதேசமாக கருதப்படுகிறது. எனினும், பல்வேறான ஆயுதம் போராட்டங்கள், நாட்டில் நடைபெறுவதையே அறியாத ஆப்கான் கோத்திர மக்கள் கூட்டம் ஒன்றும் அங்கு வாழ்கின்றமை வியக்கத்தக்கதாக உள்ளது. அக்கோத்திர மக்களை பற்றிய தகவல் வருமாறு...

## வகீஹ்

மிகவும் ஏழ்மையான சாதாரண மேய்ப்பர்களாக வாழ்க்கையை நடாத்தும் இக்கோத்திரத்தில் சுமார் 12,000 பேர் வாழ்கின்றனர். அவர்கள் டஜிகிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அருகில் ஆப்கானிஸ்தானுக்கு சொந்தமான மலைப்பிரதேசங்களிலேயே வாழ்கின்றனர். 'வகீஹ்' எனும் இக்கோத்திர வாசிகள் 4500 மீற்றர் உயரமான 'கர்கஸ்' எனும் பிரதேசத்தில் வாழ்கின்றனர்.

## இவர்கள் பற்றிய தகவல்கள்


அண்மையில் அவர்கள் குறித்த விபரங்களையும் புகைப்படங்களையும் ஆப்கான் அரசின் சுற்றுலா அமைச்சு உலகிற்கு வெளிப்படுத்தியது. அது சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே வெளியிடப்பட்டது. இந்த கோத்திர வாசிகளை தேடிச் சென்று அவர்களின் எளிய வாழ்க்கையை காண்பதற்கு மேற்குலக சுற்றுலாப் பயணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க ஆப்கான் அரசு தயாராக உள்ளது. வகீஹ் கோத்திரத்தார்கள் பற்றிய புகைப்படங்களை ஆப்கான் அரசின் அனுசரணையுடன் பிரான்சிய புகைப்படக் கலைஞரான 'எரிக் லஃபோர்க்' என்பவர் படம்பிடித்துள்ளார்.

## கொடூர யுத்தங்கள்

2001 ஆம் ஆண்டில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. அதேவேளை 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி ஒசாமா பின் லாடனின் தலைமையின் கீழ் அல்-கைதா அமைப்பினால் விமானங்களை பயன்படுத்தி அமெரிக்கா மீது நடத்திய தாக்குதலின் பின்னரே யுத்தங்கள் உக்கிரமடைந்துள்ளது. அதனால், ஆப்கானின் தலிபான் ஆட்சியாளர்கள் அல் கைதாவுக்கு ஆதரவு வழங்கியதோடு, பின்லாடனுக்கு பாதுகாப்பும் கொடுத்தனர். இதனால், அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ தாபனத்திற்குரிய நாடுகளின் இராணுவங்கள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தன. அவர்கள் தலிபான் அரசை நீக்குவதற்கு 2001 முதல் 2014 வரை ஆப்கானிஸ்தானுடன் யுத்தம் புரிந்தனர். இவ்வாறு நடைபெற்ற யுத்தங்கள் பற்றி எவ்வித தகவலும் அறியாது, யுத்தம் நடந்த சூழ்நிலையில் வாழ்கின்ற மக்களான 'வகீஹ்' கோத்திரர்கள் வியப்புக்குரியவர்களாகவே நோக்கப்படுகின்றனர்.

(-அ)










# நாஸாவின் புதிய முயற்சி



நாஸா நிறுவனமானது, நாளுக்கு நாள் பிரபஞ்சத்தை அறியும் முயற்சியில் வென்ற வண்ணமே உள்ளது. அவ்வெற்றிப்பாதையில் அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளும் ஏராளம். இப்பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் விண்வெளிக்குச் சமனான பயிற்சிக்கூடமொன்று உருவாக்கப்படவுள்ளது. அதன்மூலம் விண்வெளி வீரர்கள் பயிற்சிகளை பெற்று பல்வேறு இலக்குகளை இலகுவாக அடைய முடியும். அத்தோடு விண்வெளி வீரர்களுக்கு விண்வெளியில் நீண்டகாலமாக பணிபுரியவும் அதன்போது ஏற்படும் பிரச்சினைகளை குறைக்கவும் முடியும். நாஸா நிறுவனம் கூடிய விரைவில் செவ்வாயை அடையும் நோக்கில் இவ்வாறான விரைவான பணிகளை முன்னெடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்ஃபி தெரியும்... ஷூஃபி தெரியுமா?

ஒருவர் தன்னைத் தானே புகைப்படம் எடுத்துக்கொள்வதே 'செல்ஃபி' (Selfie) என்று அர்த்தப்படுகின்றது. அது பல பின்னணிகளுடனோ அல்லது பலருடன் சேர்ந்ததாகவோ இருக்கலாம். ஆனால், செல்ஃபி எடுப்பது இப்போது பலருக்கும் அலுத்துப் போய்விட்டது. இந்த நிலையில்தான் "ஷூஃபி" (Shoefie) அறிமுகமாகியுள்ளது.



ஷூஃபி என்றால், உங்களுக்குப் பதிலாக, நீங்கள் அணிந்திருக்கின்ற பாதணிகளை பல்வேறு விதங்களில் செல்ஃபி எடுப்பதைக் குறிக்கும். இதனை சிலர் 'ஷூ செல்ஃபி' என்றும் அர்த்தப்படுத்துகின்றனர்.



# மிகக் குறுகிய காலப் போர்

உலகில் இதுவரை இடம்பெற்ற போர்களில், மிகவும் குறுகிய காலப் போர் என வரலாற்றில் பதிவாகியிருப்பது 1896 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 ஆம் திகதி பிரித்தானியாவுக்கும் சென்சிபாருக்கும் இடையில் நிகழ்ந்த போர் (Anglo - Zanzibar war) ஆகும். இந்தப் போர் வெறும் 38 நிமிடங்கள் வரைதான் இடம்பெற்றதாம்!

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவுதான் சென்சிபார். ஓமான் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற சென்சிபாருக்கு, பிரித்தானியா ஆதரவுகளை வழங்கி வந்தது. காலப்போக்கில் பிரித்தானியாவுக்கும் சென்சிபார் ஆட்சியாளனான சுல்தான் காலித் பின் பர்காஷுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே, இந்தப் போர் ஏற்பட்டது. போர் ஆரம்பித்து சில நிமிடங்களில் பிரித்தானியாவின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சுல்தான் பர்காஷ் அரண்மனையைவிட்டு ஓடிச் சென்றார். இதனையடுத்து போரும் நிறைவடைந்தது.

# டேவி விளக்கு



உலகிலுள்ள மிகவும் ஆபத்தான - சிரமமான வேலைகளில் சுரங்க வேலையும் ஒன்று. இன்று சுரங்கத்தில் வேலை செய்யும்போது பயன்படுத்துவதற்கென்று பல்வேறு விளக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும், ஆரம்பகாலத்தில் அந்த வசதிகள் இருக்கவில்லை. எனவே, 1815 ஆம் ஆண்டு சேர். ஹம்ஃப்ரி டேவி என்ற விஞ்ஞானி, சுரங்கப் பணியாளர்களுக்கு உதவியாக பாதுகாப்பு விளக்கு ஒன்றை கண்டறிந்தார். இதனை 'டேவி விளக்கு' அல்லது 'பாதுகாப்பு விளக்கு' என்று அழைப்பர். சுரங்கங்களில் தீப்பிடிக்கக்கூடிய வாயுக்கள் இருக்கும். அவ்வாறான நிலையில், பணியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இந்த விளக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விளக்குச் சுடரின் நிறம், அளவு, எரியும் விதம் என்பனவற்றை வைத்து சுரங்கத்தினுள் ஆபத்து இருக்கிறதா? இல்லையா? என்பதை பணியாளர்கள் தீர்மானித்துக்கொள்வர்.

# அலங்கார மீன்களை வளர்க்கின்றீர்களா?

நீங்கள் செல்லப்பிராணியாக அலங்கார மீன்களை வளர்க்கின்றீர்களா? அப்படியானால் இந்த விடயங்களை கொஞ்சம் கவனத்தில்கொள்ளுங்கள்...



* மீன்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வகையிலான ஏனைய செல்லப்பிராணிகளை (உதாரணம்: பூனை, பறவைகள்) நீங்கள் வீட்டில் வளர்ப்பதாக இருந்தால், அவற்றினால் ஆபத்துக்கள் நேராத வகையில் மீன் தொட்டிகளை வையுங்கள்.
* ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று தடவைகளுக்கு மேல் உணவு போடாதீர்கள்.
* மீன்களை அதிர்ச்சியூட்டும் வகையில் தொட்டியில் தட்டவோ, ஒலி எழுப்பவோ வேண்டாம். இதனால், மீன்கள் பயப்பட்டு ஒளிந்துகொள்ளும்.
* தொட்டியின் விளிம்பு வரை நீர் நிரப்ப வேண்டாம்.
* நீங்கள் வளர்க்கும் மீன்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தொட்டியை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
* பல மீன்களை ஒரே தொட்டியில் வளர்ப்பதாக இருந்தால், மீன்களின் சுபாவத்திற்கு ஏற்ப அவற்றைத் தெரிவுசெய்யுங்கள்.
* வாரத்திற்கு ஒரு தடவை தொட்டியிலுள்ள நீரை மாற்றுங்கள்.
* நேரம் கிடைக்கும் போது மீன் தொட்டிக்கு அருகில் சென்று அவற்றைப் பார்வையிடுங்கள். மீன்களின் அசைவுகளை அவதானிப்பதனால் மன அழுத்தங்கள் நீங்கும்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஒக்டோபர் 26 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 26, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org